# கண்ணன்

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.



வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்

குடும்பச் சந்தா
ரூ. 12/-


# பொருளடக்கம்


மலர்: 2 இதழ்: 3



குழந்தைகளே! .. .. .. பக்கம் 2

சின்னராஜா - 'வாசகன்' .. .. .. 3

கிரிக்கெட் கற்றுக்கொள் - ராம்சிங் .. 9

ஜக்கு துப்பறிகிறான் - 'ஆர்வி' .. .. 13

ரொட்டி, ரொட்டி - அழ. வள்ளியப்பா .. 19

அட்டைச் சினிமாப் பெட்டி .. .. 20

திருச்சிக் கூட்டப் படங்கள் .. .. 21

பச்சை நோட்டு - ஈ. ஸ்ரீ. நரசிம்மன் .. 26

விசித்திர ராஜ்யம் - ச. கு. கணபதி ஐயர் .. 31

கண்ணன் கழக அங்கத்தினர்கள் .. .. 34

ஏரிக்கரை மாளிகை - மகேந்திரன் .. .. 37

மூடக் கழுதை - ஈசாப் கதை .. .. 43

சிங்கமும் கழுதையும் - 'சோமசன்மா' .. 44

பூனைப் பெண் - ராஜாஜி .. .. .. 49

கண்ணன் தபால் .. .. .. .. 53

கேட்டீர்களா! .. .. .. .. 55


கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே

# குழந்தைகளே!

கண்ணன் ஒவ்வோர் இதழையும் சிறப்பாகத் தயாரித்து வருவது உங்களுக்குத் தெரியும். இன்னும் புதுப் புது அம்சங்களைச் சேர்க்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறேன். இப்பொழுது தான் வர வர, கண்ணன் பத்திரிகையிலும் கண்ணன் கழகத்திலும் குழந்தைகளுக்கு உற்சாகம் தோன்றியிருக்கிறது. கழக நண்பர்களுக்குள் கடிதப் போக்குவரத்து நடக்கிறது. டில்லியில் இருப்பவனை இலங்கையில் இருப்பவன் கடிதத்தின் மூலம் நண்பனைப் பெறுகிறான். அந்த அந்த ஊரில் உள்ள விசேஷங்கள், சரித்திர முக்கியமான செய்திகள், சிநேகம் முதலிய பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள இந்தக் கடிதப் போக்குவரத்து உதவுகிறது. நாளைக்கு டில்லிக்கு இலங்கை நண்பன் போனால்கூட அங்கே அவனுக்கு ஒரு நண்பன் இருக்கிறானல்லவா? உலகம் பூராவும் நண்பர்கள் இருந்தால் ஒருவனுக்குக் கவலை எதற்காக? இப்படியே சிறுகச் சிறுகத்தான் நட்பு வளரவேண்டும்.

இந்த இதழில் ஒரு போட்டி வெளியிடுவதாக இருந்தேன். பரீட்சை சமயம் நெருங்குகிறது. அதனால் கதைப் போட்டி வைத்து உங்கள் கவனத்தைத் திருப்ப நான் விரும்பவில்லை. இந்த இரண்டு மாதங்களும் போகட்டும். அடுத்த போட்டியை மே மாத இதழில் வெளியிடுகிறேன். நீங்கள் விடுமுறை நாட்களில் போட்டிபோட்டுக் கொண்டு கலந்து கொள்ளலாம்.

கண்ணனில் உங்களுக்குப் பிடித்தவை, வேண்டியவை முதலியவற்றை நீங்கள் எழுதியனுப்பலாம். நீங்கள் எப்படி எழுதினாலும் அவ… வெகு கவனமாக நாங்கள் படித்து… பார்த்து வேண்டியதைச் செ… வோம். உங்களுடைய பொழு… போக்குக்காகவே புத்தகங்கள் ப… வெளியிடுகிறோம். விலையு… குறைவுதான். அடுத்தடுத்துப் பு… தகங்கள் கொண்டு வர எண்… யிருக்கிறோம்.

கண்ணன் கழகம் நாளுக்கு நா… வளர்ந்து வருகிறது. இன்னு… கொஞ்சநாளில் இதுவரை சேரா… வர்கள் கூடச் சேர்ந்துவிடுவார்கள் என்று நினைக்கிறேன். உங்கள் பள்ளிக்கூடத்திலும், ஊரிலும் நடக்கும் எந்த வைபவத்துக்கும் கண்ணன் அங்கத்தினர்கள் பாட்ஜ் அணிந்து செல்லலாம். அழகுக்கு அழகாய் இருக்கும்; உங்கள் ஊரிலேயே நீங்கள் எவ்வளவு நண்பர்கள் இருக்கிறீர்கள் என்றும் தெரியும். முடிந்தால் உங்கள் ஊரில்கூட நீங்கள் குழந்தைகளாகச் சேர்ந்து கண்ணன் கிளைக்கழகம் ஏற்படுத்திக் கொள்ளலாம். இது பற்றி எங்களுக்கு எழுதுங்கள்.

கண்ணன் பதக்கங்கள் இன்னும் சிலருக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. மறுபடியும் பம்பாயிலிருந்து அனுப்புவதை அவர்கள் தாமதப் படுத்துகிறார்கள். எதற்கும் இரண்டு வாரத்துக்குள் வந்துவிடும். உடனே அனுப்ப ஏற்பாடுசெய்கிறோம்.

இப்பொழுது கிரிக்கெட் கற்றுக் கொடுக்கும் படங்களைப் பாராட்டிப் பல குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். இன்னும் சில மாதங்களில் அந்தப் படங்கள் தீர்ந்துவிடும். அடுத்தபடி உங்களுக்கு எந்த விளையாட்டுத் தேவை என்று எழுதுங்கள்.

—ஆசிரியர்.

# சின்னராஜா

வாசகன்

## 3

## குதிரைக்காரன்

ராத்திரி நெடுநேரம் குருட்டு யோசனையில் மூழ்கியிருந்ததனால், விடிந்த பிறகும் சின்னராஜா எழுந்திருக்கவில்லை. நேரம் கழித்தே எழுந்திருந்தான். எழுந்தவுடன் அவனுக்கு முதல்நாள் ராத்திரி நடந்தது நினைவுக்கு வந்தது. வாத்தியார் காலையில் பாடம் சொல்லிக் கொடுக்க வருவாரோ இல்லையோ என்று அவனுக்குச் சந்தேகமாகவே இருந்தது.

எழுந்து பல் தேய்த்துக் கொண்டு உணவு உண்டான். வாததியார் வரவில்லை. அவருக்கு நிச்சயமாகக் கோபந்தான் என்று உறுதிப் படுத்திக் கொண்டான். அவரிடம் தானே போய் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால் அந்த நினைப்பு நீடித்து நிற்கவில்லை. முதல் நாள் வேட்டையில் முயலைத் தப்ப விட்டுவிட்டதுதான் அவன் மனசை உறுததியது. 'இன்றைக்கு வேடடைக்குப் போய் நம்முடைய முழுச் சாமர்த்தியததையும் காட்டிவிட வேண்டும்' என்று தீர்மானித்துக்கொண்டான். வேட்டையை நினைத்தவுடன் அவனுக்கு எல்லாம் மறந்து போய்விட்டன.

அவன் வெளியே ஓடி வந்தான். "அதிகமான்!" என்று கூவி அழைத்தான். அவன் எங்கிருந்தோ வந்து முன்னே நின்றான். "வேட்டைக்குப் போக வேண்டும்" என்று சின்னராஜா சொன்னதுதான் தாமதம்; அவன் ஒரு நொடியில் இரண்டு வில்லும் இரண்டு அம்புறாத் தூணிகளும் கொண்டு வந்து தயாராக நின்றான்.

காலை நேரத்தில் அகழியின் மேல், தூக்கும் பாலத்தை விடமாட்டார்கள். அதுவும் பார்த்தாண்ட அரசர் ஊரில் இல்லாத போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் அல்லவா? அகழியைத் தாண்டப் பாலத்தைத தாழ்த்தும் வரைக்கும் சின்னராஜா காத்திருக்கவிலலை.

ஒரு திட்டி வாசல் வழியாக வெளியே சென்றார்கள். அகழி ஓரத்தில் புதர்களுக்கிடையே ஒரு தெப்பத்தை ஒளித்துவைத்திருந்தார்கள். அதைத் துணையாகக் கொண்டு அகழியைக் கடந்து சென்று சற்றுத தூரத்தில் உள்ள காட்டுக்குள் போனார்கள். காட்டுக்குள் அடிவைத்தானோ இல்லையோ, சின்னராஜாவுக்கு வந்த உற்சாகத்

தைப் பார்க்கவேணுமே! முதல் நாள் வாத்தியாருக்கு முன்னாலே உம்மணாமூஞ்சியாக உட்கார்ந்திருந்த சின்ன ராஜாவா இவன் என்றுதான் நினைக்கும்படி இருக்கும். இப்போது எத்தனை கோலாகலம்! என்ன சுறுசுறுப்பு!

“இன்றைக்குப் பார், எத்தனை முயல்களையும் மான்களையும் கொன்று குவிக்கப்போகிறேன், பார்!” என்று உற்சாகத்தோடு சின்னராஜா சொன்னான்.

“வாத்தியார் அரண்மனையில் வந்து உன்னைத் தேடினால்?” என்று அதிகமான் கேட்டான்.

வாத்தியாரைப் பற்றிய பயம் சின்னராஜாவுக்கு இப்போது கடுகளவும் இல்லை. தன் சொந்த ராஜ்யத்துக்கு வந்துவிட்டவனைப்போல இருந்தான் அவன்.

“அவர் வந்துவிட்டுப் போகட்டுமே! அவருக்கு வேட்டையின் சுவாரஸ்யம் தெரியுமா? சதா புத்தகமும் படிப்புந்தான் அவருக்குத் தெரியும். அம்பைக் கையில் கொடுத்தால் அதை எப்படி வில்லிலே வைக்கிறது என்பதுகூடத் தெரியாதே!” என்று சொல்லிவிட்டு ஏளனமாகச் சிரித்தான். “அதோ பார், அந்த உச்சாணிக் கொம்பிலே இருக்கிறதே, அந்த

5 MAY 951
MADRAS

அணில் மேலே அம்பு விடட்டுமா? பார்; ஒரே விநாடி.”

அடுத்த கணத்தில் சின்னராஜா விட்ட அம்பு கொஞ்சமும் குறி தப்பாமல் அந்த அணிலை அடித்துவிட்டது. அது மரத்திலிருந்து கீழே விழுந்தது. சின்ன

ராஜா குறி தப்பாமல் அடித்ததைக் கண்டு அதிகமான் ஆச்சரியப்பட்டான்.

இரண்டுபேரும் காட்டுக்குள்ளே போனார்கள். பறவைகளை எய்து வீழ்த்தினார்கள். அதிகமான் ஒன்று இரண்டு முறை அம்பு எய்தான். அவனுக்குச் சரியாகக் குறிபார்க்கத் தெரியவில்லை. சின்னராஜா அவனுக்குக் குறிபார்க்கக் கற்றுக் கொடுத்தான். இப்படியே, நேரம் செல்வதே தெரியாமல் அவர்கள் காட்டுக்குள் போய்க்கொண்டிருந்தார்கள். சூரியன் மெல்ல மெல்ல வானத்தில் ஏறிக்கொண்டிருந்தான். உச்சிக்கும் வந்துவிட்டான். சின்னராஜாவுக்கும் அதிகமானுக்கும் பசி வயிற்றைக் கிள்ளியது. “பசிக்கிறதே! நாம் கையில் ஏதாவது எடுத்துக் கொண்டுவரவில்லையே!” என்றான் அதிகமான். “எதற்கு எடுத்துக்கொண்டு வருவது? இதோ இன்னும் சிறிது தூரம் போனால் ஒரு நெடுவழி இருக்கிறது. அந்த வழிக்கு அருகில் தித்திப்பு மாம்பழங்கள் கிடைக்கும்” என்று சின்னராஜா சொன்னபோது அதிகமானுக்கு நாக்கில் ஜலம் ஊறியது.

இருவரும் மாமரத்தை நோக்கிப் போனார்கள். குலுங்கக் குலுங்கக் காய்த்திருந்த மாங்காய்களுக்கிடையே பளபளவென்று சில பழங்கள் மின்னிக்கொண்டிருந்தன. அவரவர்கள் ஊரில் மாம்பழங்கள் ஏராளமாகக் கிடைத்தன. அப்படி இருக்கும்போது காட்டுக்குள்ளே வந்து யார் இந்தப் பழங்களைக் கொண்டு போகப் போகிறார்கள்? அந்த நெடுவழியில் யாராவது பிரயாணிகள் போனால் அவர்களுக்கு உபயோகப்படட்டும் என்று யாரோ புண்ணியவான்கள் அந்த மரங்களை அங்கே நட்டிருக்கவேண்டும்.

இரண்டு சிறுவர்களும் மரத்தின்மேல் ஏறிப் பழங்களைப் பறித்து வேண்டியமட்டும் தின்றார்கள். அங்கே இருந்த ஓர் ஓடைக்குப் போய்த் தண்ணீர் குடித்தார்கள். மறுபடியும் மாமரத்துக்கடியில் வந்து சிறிது இளைப்பாறலாம் என்று படுத்தார்கள். அப்போது

ஏதோ சத்தம் கேட்டது. தூரத்தில் யாரோ ஒருவன் வேகமாகக் குதிரையில் வருவது தெரிந்தது. உடனே இரண்டு பேரும் பக்கத்தில் உள்ள ஒரு புதரில் மறைந்தபடியே பார்த்தார்கள். வரவர அந்தக் குதிரை அருகில் வந்துகொண் டிருந்தது.

சிற்றரசர்களுக்குள் பகையும் விரோதமும் மூண்டிருந்த காலம் அது என்று முன்பே சொல்லியிருக்கிறேன் அல்லவா? ஆகையால் எந்தச் சமயத்திலும் எந்த ஊரிலும் சண்டை ஏற்படலாம். ஜனங்கள் எப்போது சண்டை வருமோ என்று பயந்து கொண்டே இருந்தார்கள். யாராவது புதிய மனிதன் வந்தால் பகைவரிடமிருந்து வந்த ஒற்றனாக இருக்கலாம் என்று பயந்தார்கள். அதனால்தான் சின்னராஜாவும் அதிகமானும் ஒளிந்துகொண்டார்கள்.

குதிரையின் மேல் வந்தவனுடைய முகம் தெளிவாகத் தெரிந்தது அவன் ஆலூர் அரண்மனையைச் சேர்ந்தவனாகத் தெரியவில்லை. வேறு அரசனுடைய ஏவலாள் என்று தோன்றியது. குதிரை வந்து கொண்டிருந்தபோது திடீரென்று ஒரு காரியம் நடந்தது. நடுவில் பாதையின் பக்கத்தில் இருந்த ஒரு புதரிலிருந்து இரண்டுபேர்கள் வெளிவந்தார்கள். குதிரையை வழிமறித்து அந்த ஆளின்மேல் பாய்ந்தார்கள். குதிரையின்மேல் இருந்தவன் தன் இடையில் வாளைச் செருகி யிருந்தான். அதை எடுப்பதற்குள் அந்த முரடர்கள் அவன் கையைப் பற்றிக் கொண்டார்கள். அவனைக் குதிரையிலிருந்து கீழே இழுத்து வீழ்த்தினார்கள்.

சிறுவர்கள் இருவரும் இதைப் பார்த்தார்கள். அதிகமானுக்கு இருதயம் படக் படக்கென்று அடித்துக்கொண்டது. பயமே அறியாத சின்னராஜாவுக்கோ ஆத்திரமும் இரக்கமுமே உண்டாயின. "என்ன அக்கிரமம்! தனியாக வந்த அந்த மனிதனை இந்த இரண்டு முரடர்கள் திடீரென்று மடக்கிக் கொண்டார்களே! நாம் சும்மா இருப்பதா?" என்று சொல்லி அவன் பாதைக்கு வந்துவிட்டான். உள்ளூறப் பயம் அடித்துக் கொண்டாலும் அதிகமானும் அவனுடன் போனான். சின்னராஜா பாதையில் அந்தத் திருடர்கள் உள்ள இடத்தை நோக்கி ஓடினான். அம்பை எடுத்துக் குறிபார்த்து எய்தான். திருடர்கள் கீழே விழுந்த மனிதனுக்கருகில் மண்டியிட்டு உட்கார்ந்து சோதித்துக்கொண் டிருந்தார்கள். பக்கத்தில் யாரும் இருக்க மாட்டார்கள் என்பது அவர்கள் எண்ணம். ஆகவே அவர்கள் வேறு எதையும் பாராமல் தங்கள் காரியத்தைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். சின்னராஜாவின் அம்பு விர்ரென்று பாய்ந்து ஒருவனுடைய தலைமயிரைக் கோதிக் கொண்டு போயிற்று. அவன் தலை நிமிர்ந்து பார்த்தான். இரண்டு சிறுவர்களும் அவன் கண்ணில் பட்டார்கள். இன்னும் பெரியவர்கள் யாராவது

உடன் இருப்பார்கள் என்ற பயமோ என்னவோ, அந்த இரண்டு திருடர்களும் எழுந்து, விட்டார்கள் சவாரி.

அதிகமான் சற்று ஆறுதலாகப் .பெருமூச்சுவிட்டான். சின்னராஜா வேகமாக ஓடினன். அதிகமானும் அவனைத் தொடர்ந்து ஓடினன். குதிரையின்மேல் வந்தவன் விழுந்தபடியே கிடந்தான். அவன் பக்கத்தில் போய்ப் பார்த்தார்கள். அவன் பாவம், மயக்கம் போட்டு விழுந்து கிடந்தான்! சின்னராஜா அவன் மூக்கில் கையை வைத்துப் பார்த்தான். மூச்சு வந்துகொண்டிருந்தது. "டேய், அதிகமான், ஓடு ஓடு; அந்த ஓடைக்கு ஓடிப்போய், கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா!" என்ருன்.

"தண்ணீர் கொண்டுவரப் பாத்திரம் இல்லையே!" என்ருன் அதிகமான்.

"போடா முட்டாள்! அங்கே இருக்கிற பெரிய இலைகளைப் பறித்து மடக்கி அதில் கொண்டுவா இந்தா, இந்தத் துணியையும் நனைத்துக் கொண்டு வா" என்று சின்ன ராஜா ஏவினன். அவன் அப்படியே செய்தான். நனைந்த துணியைப் பிழிந்து அந்த ஜலத்தைக் கீழே கிடந்த மனிதன் முகத்தில் தெளித்தான். இலையில் மொண்டுவந்த தண்ணீரை வாயில் கொஞ்சங் கொஞ்சமாக ஊற்றினன். கீழே கிடந்தவன் மெதுவாக இரண்டு மிடறு ஜலத்தைக் குடித்தான். அதனுல் அவனுக்குக் கொஞ்சம் தெளிவு உண்டாயிற்று. கண்ணை மெல்லத் திறந்து பார்த்தான். சின்ன ராஜா, "பயப்படாதே! இன்னும் கொஞ்சம் தண்ணீர் குடி" என்ருன். அந்த மனிதன் மறுபடியும் கொஞ்சம் தண்ணீர் குடித்தான். பிறகு மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். உட்கார்ந்தவன் இடுப்பிலே எதையோ தடவிப் பார்த்தான். அவன் உடம்பில் காயம் ஒன்றும் படவில்லை. எதையோ பறிகொடுத்திருக்க வேண்டும் என்று தோன்றியது. "என்ன தேடுகிருய்?" என்று சின்ன ராஜா கேட்டான். அந்த மனிதன் பதில் ஒன்றும் சொல்லாமல் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். "நீ யார்?

---



பையன்: 'இரவல் கொடுக்காதே; வாங்காதே' என்று புத்தகம் எழுதியிருக்கிறீர்களாமே. அதைப் பார்த்துவிட்டுத் தருவதாக என் அப்பா வாங்கிக்கொண்டு வரச் சொன்னர்

ஆசிரியர்: அட ராமா! என்னிடம் கடைசியாக இருந்த ஒரு பிரதியையும் இன்றுதான் ஒருவர் வந்து இரவல் வாங்கிக்கொண்டு போனர்!

எங்கே போகிறாய்? பயப்படாமல் சொல்'' என்று கேட்டான் சின்னராஜா. அதற்கும் அவன் பதில் சொல்லவில்லை.

''ஏதாவது பணம் வைத்திருந்தாயா? வேறு ஏதாவது விலையுள்ள சாமானைக் காணவில்லையா? அந்தத் திருடர்கள் எடுத்துக்கொண்டு போயிருக்கலாம்'' என்றான் சின்னராஜா.

''அவர்கள் கையில் ஒன்றும் காணோமே! அவர்கள் பெற்றேன், பிழைத்தேன் என்றல்லவா ஓடிப்போனார்கள்?'' என்று அதிகமான் சொன்னான். அவனுக்கு இப்போதுதான் கொஞ்சம் தைரியம் வந்திருந்தது.

''அப்படியானால் என்னதான் தேடுகிறாய்?'' என்று மறுபடியும் சின்னராஜா கேட்டான்.

''ஒன்றும் இல்லை சாமி; ஒரு சின்னப்பையைக் காணவில்லை'' என்றான் அந்த மனிதன்.

''அந்தப் பையில் ஏதாவது விலையுயர்ந்த நகை இருந்ததோ?'' என்று கேட்டான் சின்னராஜா. அதற்கு அவன் பதில் சொல்லவில்லை. மிக்க கலவரம் அடைந்து போயிருந்தான்.

''உன்னைப் பார்த்தால் அதிகக் கலக்கம் அடைந்தவனாக இருக்கிறாய். நீ பயப்பட வேண்டாம். அந்தத் திருடர்கள் ஓடின ஓட்டத்தைப் பார்த்தால் நீகூடச் சிரித்திருப்பாய். நாங்கள் வந்தோமோ, நீ பிழைத்தாயோ! நான் ஆவூர்ச் சின்னராஜா; என்னைத் தெரியுமோ உனக்கு?'' என்று சின்னராஜா அவனுக்குத் தைரியம் உண்டாகும்படி பேசினான்.

அந்த மனிதனோ இன்னும் கலவரம் தெளிந்தவனாகக் காணவில்லை. சின்னராஜாவை ஏற இறங்கப் பார்த்தான்.

''சரி; நீ இங்கேயே இரு; உன் குதிரை எங்கேயோ போய்விட்டது. அதைத் தேடிக்கொண்டு வருகிறோம். பிறகு உன்னை எங்கள் அரண்மனைக்கு அழைத்துப் போகிறேன். அங்கே இன்றைக்கு ராத்திரி இருந்துவிட்டு நீ போகலாம். என்ன, தெரிகிறதா?''

அவன் சிறிது தலையை அசைத்தான். அந்த இளஞ் சிறுவர் இருவரும் குதிரையைத் தேடிக்கொண்டு புறப்பட்டார்கள்.

(தொடரும்)

---



வேலு: உன் கார் ஒரு மரத்தில் மோதி, சுக்கு நூறாக நொறுங்கிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். உண்மைதானா?

மாணிக்கம்: துண்டு துண்டாக நொறுங்கிவிட்டது. நான் தப்பியது தெய்வச் செயல்தான்.

வேலு: அதற்காக நான் ரொம்ப வருந்துகிறேன்.

# கிரிக்கெட் கற்றுக்கொள்

ராம்சிங்

போட்டோ:
எம். டி. வின்ஸென்ட்

## நேரான அடி
(STRAIGHT DRIVE)



*1. பொதுவான ஆரம்ப நிலை.*



**2. மட்டையைப் பிடித்திருக்கும் கைகள் சேர்ந்திருக்கின்றன. அப்பொழுதுதான் பந்தை அடிப்பதற்கு வேண்டிய வலுவும் லாகவமும் உண்டாகும்.**

3. இரண்டு கால்களும் சம அளவில் நிற்பதைக் கவனியுங்கள். முன்னங்கால்கள் நம் பக்கம் திரும்பியிருக்கின்றன. எந்தப் பக்கம் வேண்டுமானாலும் திரும்பி அடிக்க இப்படித்தான் நிற்க வேண்டும்.



4. ஸ்டம்புக்கும் பின்னுலிருந்து மட்டையின் வீச்சு வருகிறது. நேராக நின்று அடிக்க அப்பொழுதுதான் சௌகரியமாய் இருக்கும்.

5 பந்து விழும் இடத்துக்குச் சமீபமாக முன்னங்கால் நெருங்கி வந்திருக்கிறது. பந்தைச் சுலபமாக அடிக்கும்படி தோள்பட்டை வளைந்து, முழங்கை நன்ருக உயர்ந்திருக்கிறது.



6. மட்டையில் பந்து அடிபடும்போது காலோடு மட்டை, மட்டையைப் பிடித்துள்ள கைகள் - எல்லாம் சேர்ந்திருக்கின்றன. பந்து மட்டைக்கு நேராக வாட்டமாய் இருப்பதால் சிரமப்படாமல், ஆனல் இழுத்து அடிக்க முடியும்.



7. பந்தை அடித்துக் கொண்டே அவர் கொஞ்ச தூரம் வந்து விட்டார். அப்பொழுதும் கால்களை நிலத்தில் சரியாக ஊன்றி உடம்பை வளைத்துக் கொண்டிருக்கிறார்.



8. பந்தை அடித்தாகி விட்டது. கைகள் இன்னமும் சேர்ந்தே தான் இருக்கின்றன. அடித்த இடத்தை அவர் முகம் பார்க்கிறது. உடம்பும் குனிந்தபடியே தான் இருக்கிறது.



# ஜக்கு துப்பறிகிறான்

'ஆர்வி'

ஜக்குவுக்கு டெலிபோன் மணி அடிக்கும் என்பது தெரியும். அதனால்தான் உல்ப் எடுப்பதற்கு முன்பாக அவன் போய் எடுத்துக்கொண்டான்.

"ஹல்லோ!"

"ஹல்லோ!"

ஜக்குவுக்கு அந்தக் குரலைக் கேட்டதும் ஒரு ஷாக் அடித்தது போலிருந்தது. ஆனால் அடுத்த விநாடியே அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டான். அந்தப் பக்கத்திலிருந்து பேசியது யார் தெரியுமா? அவனுடைய மாமாவே தான்!

"யாரு பேசறது, அருணாசலந்தானே?" என்றார் அவன் மாமா.

"ஆமாம்" என்றான் ஜக்கு. கட்டைத் தொண்டையில் சிலர் பேசுவதில்லையா, அதைப்போலத் தன் குரலைக் கட்டையாக்கிக் கொண்டான்.

"என்ன ஐயா, குரலைப் பார்த்தால் யாரோமாதிரி இருக்கிறதே?" என்றார் மாமா. என்ன இருந்தாலும் சந்தேகம் தட்டாதா?

"இல்லே ஸார்—தொண்டை கட்டிப் போயிருக்கு—என்னமோ தெரியல்லே! மோர் சாப்பிட்டேன்; அதனாலேதான். வந்து..." என்று ஜக்கு மெதுவாகப் பேசினான்.

பக்கத்தில் நந்து முதலானவர்கள் ஜக்குவின் அண்டப் புளுகைக் கேட்டு வாயைப் பொத்திக்கொண்டார்கள். ஜக்குவும் விரலைக் காட்டி அவர்களை உஷார்ப்படுத்தினான். இல்லாவிட்டால் வேண்டுமென்றே சோனி கடகடவென்று சிரித்துக் காரியத்தைக் கெடுத்துவிடுவான்.

"நம்ம பயல் வந்தானா அங்கே?"

"உம்—?"

"நம்ம ஜக்குப் பயல் வந்தானான்னு கேக்கறேன்?"

"உம். உம்" என்று ஜக்கு இரண்டுக்கும் பொதுவாகச் சொல்லிவைத்தான். எதைச் சொன்னால் அவனுடைய மாமாவுக்குத் திருப்தியாக இருக்கும் என்று அவனுக்குத் தெரியவில்லை. சொல்வதை அவரும் நம்பவேண்டுமே!

"உம்முடைய கண்ணிலே அகப்பட்டானா, ஐயா?"

"ம்..ஊஹூங்.."

"ஹல்லோ, அருணாசலம்! அந்தப் பயல் வெளியிலே தப்பிச்சுக்காமல் எப்படியாவது பார்த்துக்கொள்ளும். நான் எப்படியும் இன்னும் ஒரு மணி

நேரத்திலே அங்கே வந்துடறேன்."

"சரி; அதுக்குள்ளே அவன் போயிட்டால்?"

"போகாமல் பார்த்துக்கணும் என்கிறதுக்காகத்தானே உமக்குப் போன் பண்றேன்?"

"என்னமோ 'ட்ரை' பண்றேன். சரி; அவ்வளவுதானே?"

"அவ்வளவுதான். வந்து இன்னொரு விஷயம்!"

"என்ன?"

"இன்னும் அந்தப் பங்களாவிலே என்ன என்னவோ நடக்கிறது என்று சொன்னீரே—அது விஷயமாய்.."

"உம்—"

"ஹல்லோ! அருணாசலம்



மாதிரி பேசமுடியாமல் முழிக்கிற ஜக்கு ஸார், ஜாக்கிரதை!"

ஜக்கு டக்கென்று ரிஸீவரைக் கீழே வைத்தான். அவனுடைய படபடப்பில் மேஜை மேலிருந்த 'காலிங்பெல்' மீது ரிஸீவர் டங்கென்று இடித்தது. பிறகுதான் சரியாக டெலிபோன்மீது அதை வைத்தான்.

ஆனால் பெல் அடித்தால் யாராவது வராமல் இருப்பார்களா? காக்கிச் சட்டையும் அரை மீசையுமாய் இருந்த ஒருவன் உள்ளே வந்து எட்டிப் பார்த்தான்.

ஜக்கு வெகு நிதானத்துடன் தைரியமாக, "யாரப்பா நீ?" என்றான்.

"பையன் இப்பத்தாங்க வெளியே போனான். கேட்டால் இதோ வரேன்னு சொல்லிப்பிட்டு இப்பத்தான் போனான்!" என்றான் அவன்.

"ஓ! நீதான் MXY 2125 டிரைவரோ?"

"ஆமாங்க!"

"சரி போ. பையன் வந்தால் உள்ளே அனுப்பு!" என்று சொல்லிவிட்டு, ஜக்கு ஜம்பமாய் அங்கிருந்த சுழல் நாற்காலியில் உட்கார்ந்து ஒரு சுற்றுச் சுற்றினான். நந்து, உல்ப், சோனி, பாலு எல்லாருக்குமே அவன் நடத்தை விசித்திரமாய் இருந்தது. திடீரென்று ஜக்கு, "இந்தாப்பா டிரைவர்! ஒரு காரியம் செய்வியா? எங்களைக் கொஞ்சம் கிரீன் வேஸ் ரோடு வரையிலும் கொண்டுபோய் விடணுமே!" என்றான்.

டிரைவர், "வந்து..ரெட்டியார்...கிட்டே....ஒரு வார்த்தை!.." என்று மென்று விழுங்கினான்.

"ரெட்டியார் சொல்லித்தாம்பா சொல்றேன். நீ வேணா போய்க் கேட்டுக்கிட்டு வாயேன். அவங்க வெளியே வர இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். நீ பத்து நிமிஷத்திலே

திரும்பிவிடலாம்" என்றான் ஜக்கு.

"சொல்லியாச்சுன்னா நான் ரெடி. புறப்படுங்க!" என்றான் டிரைவர்.

"சரி; வாங்கடா போகலாம்" என்று ஜக்கு ஜிவ்வென்று எழுந்தான். மற்றவர்களும் பின் தொடர்ந்தார்கள்.

கார் நம்பரைத்தான் அவன் முதலிலேயே மேலேயிருந்து கவனித்து வைத்திருந்தானே. அந்த விஷயத்தை டிரைவர் கண்டானா?

பங்களா காம்பவுண்டை விட்டுக் கார் வெளிப்பட்டுத் திரும்பியதும் ஜக்கு எட்டிப் பார்த்தான். போர்டிகோவின் மேலே யாரோ கையைக் காட்டுவது தெரிந்தது. ஆனால் நல்ல வேலையாக டிரைவர் அதைக் கவனிக்கவில்லை. எதிரே அருணாசலம் தலை தெறிக்க பங்களாவை நோக்கி ஓடி வந்தார். ஜக்கு தலையை வெளியே நீட்டி, "ஹல்லோ, மிஸ்டர் அருணாசலம்! போயிட்டு வறோம். அப்புறமா

மீட் பண்றேன் உங்களை!"
என்றான்.

அருணாசலம் விக்கித்துப் போய் அவனையே பார்த்துக்கொண்டு நின்றார். சிட்டாகப் பறந்துசெல்லும் காரைப் பின்தொடர அவரால் முடியுமா?

கார் மேற்கு நோக்கிச் சென்றது. அப்படியே தேனாம்பேட்டைமௌண்ட் ரோடு போய்ச் சேர்ந்துவிடுவது என்பதுதான் ஜக்குவின் எண்ணம். ஆனால் நடுவில் பக்கிங்காம் கால்வாய் அவன் கண்ணில் பட்டது. அதில் படகு ஒன்று மெதுவாக ஊர்ந்துவருவதையும் அவன் கண்டான். அவனுடைய கூரிய மூளையில் சரக்கென்று ஓர் அபூர்வ யோசனை உதித்தது.



"அப்பா டிரைவர்! காரை இங்கேயே நிறுத்து. நாங்கள் இறங்கிக் கொள்கிறோம். நீ உடனே திரும்பிப் போ. அப்புறம் நேரமாயிட்டுதுன்னு உங்க ரெட்டியார் என்னைக் கோவிச்சிக்குவார்!" என்றபடி சட்டைப் பையில் கையை விட்டு எட்டணாவை வெளியே எடுத்தான். டிரைவர் காரை நிறுத்திவிட்டு, "எனக்கு என்னாத்துக்குங்க!" என்று தலையைச் சொரிந்தபடியே வாங்கிக்கொண்டு காரைத் திருப்பினான்.

"என்னடா ஜக்கு, வந்தது தான் வந்தோம். இந்தக் காரிலேயே வீட்டுக்குக் கொண்டு போய் விடச் சொல்றதுக்கு என்னடா?" என்றான் நந்து.

"அதுவா? வேறே வினை வேண்டியதில்லை!" என்று ஜக்கு பாதையைவிட்டுக் கால்வாய் ஓரமாக இருந்த மரத்தடியில் போய் நின்றான்.

படகு சமீபத்தில் வந்தது. ஜக்கு படகோட்டியைப் பார்த்து, "எப்பா! எங்களை மயிலாப்பூர் வரைக்கும் கொண்டு போய் விடுவாயா? படகு ஏறணும்னு இவ்வளவு தூரம் ஆசையா வந்திருக்கோம்!" என்றான்.

"தலைக்கு இரண்டணா வீதம்




கொடுப்பியா?" என்று கேட்டான் படகோட்டி.

"அடேயப்பா! ஓரணாத் தருவேன். உனக்கு ஒரு சிரமமும் இல்லாமே நாங்களே தள்ளறோம் படகை - சரிதானே?" என்று பேரம் பேசினான் ஜக்கு. கேட்கும் துட்டை உடனே தருகிறேன் என்றால் படகுக்காரன் ஏதாவது சந்தேகப்பட மாட்டானா?

"சரி, ஏறுங்க!" என்றான் படகோட்டி. நந்துவும் உல்பும் அட்டகாசத்துடன் ஏறிக் கொண்டார்கள். சோனியோ ஏறிக்கொள்ளாமல் தயங்கிக் கொண்டிருந்தான். அதைக் கண்ட ஜக்கு, "அடே, போன கார் மறுபடியும் வந்துவிடும். ஐந்து நிமிஷம் போதும், அவர்கள் திரும்பி வருவதற்கு. ஏறு, ஜல்தியாக!" என்றான்.

"வந்தால் என்னடா பண்றது?" என்றான் பாலு.

"வந்தால் வரட்டுமே? நாம்ப படகுலே போகப் போறோம்னு அவனுகளுக்கு ஜோஸியமா தெரியும்? ஏதோ எனக்கு இந்தப் படகைப் பார்த்ததும் இந்த யோசனை தோணித்து. அதை

அவனுகள் கண்டானுகளா? நேரே மௌண்ட்ரோடுக்குத் தான் போய் நிப்பாங்க!" என்று சமாதானம் சொன்னான் ஜக்கு.

எல்லாரும் அவர்கள் காரில் வந்து ஏமாந்து போகப் போவதை நினைத்துச் சிரித்தார்கள். உல்பு படகு தள்ளும் கோலை எடுத்து வெகுநாள் பழக்கம் உள்ளவன் மாதிரி தரையில் ஊன்றித் தள்ளினான். ஜக்கு படகின் பெட்டிக் கூண்டின்மேலே ஏறி உட்கார்ந்து கொண்டான். நந்து தண்ணீரைக் கிழித்துக்கொண்டு செல்லும் முனையில் கையை இடுப்பில் வைத்துக் கொண்டு பெருமையுடன் நின்றான். சோனியும் பாலுவும் நடுப் படகிலிருந்த ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

படகோட்டி முண்டாசை அவிழ்த்து விட்டு வெற்றிலைப் பொட்டலத்தைப் பிரித்தான். பிரயாணம் வெகு உல்லாசமாய் இருந்தது.

"அடே, அதோ பிராடீஸ் ரோடு பாலம் தெரியறதுடா!" என்று கூவினான் நந்து.

"ஆமாண்டா!" என்றான் பாலு.

"படகு அதுக்குள்ளே நுழைஞ்சு போறபோது ரொம்ப ஜோராய் இருக்கும், இல்லே?" என்றான் நந்து ஆனந்தத்துடன்.

"டேய் ஜக்கு! நீ கீழே இறங்கிவிடடா, தலையில் இடித்தால்?" என்றான் பாலு.

உடனே இதைக்கேட்டு எல்லாரும் சிரித்தார்கள். "அடேயப்பா அது எவ்வளவு உயரம்! என் தலையில் இடிக்கவாவது?" என்று ஜக்கு சொல்லிக்கொண்டிருக்கும்போதே படகு பாலத்தில் நுழைந்துவிட்டது.

"ஹோ ஹோ ஹோ!" என்று எல்லாப் பையன்களும் குஷியாகக் கூச்சல் போட்டார்கள்.

அடுத்த கணம் படகு பாலத்தைவிட்டு வெளிப்பட்டதும் பாலத்தின் மேலிருந்து, "ஜக்கு, டேய் ஜக்கு!" என்ற குரல் வந்தது.

ஜக்கு திடுக்கிட்டு மேலே பார்த்தான். நந்து, உல்பு எல்லாரும் பார்த்தார்கள். அவர்களுடைய சப்த நாடியும் ஒடுங்கிவிட்டன. அங்கே ஜக்குவின் மாமா நின்று கொண்டிருந்தார். ஆனால் படகு அவருக்காக நின்று விடுமா?

அது போய்க்கொண்டே இருந்தது. உல்புக்கு நிறுத்தத் தெரியவில்லை. படகு கச்சேரி ரோடு பாலத்தையும் கடந்து வந்துதான் நின்றது.

"தம்பீ! துட்டை எடு!" என்றான் படகுக்காரன்.

ஜக்கு தலைக்கு ஓரணாவீதம் எண்ணிக் கொடுத்துவிட்டு, "டேய்—நாம்ப நாளைக்குச் சந்திக்கலாம். நாங்க போயிட்டு வரோம்!" என்று நந்துவுடன் ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிச் சென்றான்.

(தொடரும்)

# ரொட்டி, ரொட்டி!

அழ. வள்ளியப்பா

ரொட்டி, ரொட்டி, ரொட்டியாம்
வெட்டி, வெட்டி வெண்ணெயில்
தொட்டுத் தொட்டு வாயிலே
புட்டுப் புட்டுப் போடலாம்.

ரொட்டி என்று சொன்னதும்
மட்டில் லாத ஆசைதான்!
சொட்டு தம்மா எச்சிலும்!
துட்டுக் கெங்கே போவது?



கிட்ட உள்ள கடையிலே
ரொட்டி கூட விற்குது
துட்டில் லாமல் கிடைக்குமோ?
தட்டி டாமல் தந்திடு.

# நீங்களே செய்யலாம்




## அட்டைச் சினிமாப் பெட்டி

**தேவையானவைகள்:** நீண்ட அட்டைப் பெட்டி, பொத்தான் போலுள்ள இரண்டு நெட்டிப்பிடிகள், பிலிம் சுருள், இரண்டு உறுதியான குச்சிகள், இரண்டு நூல்கண்டு கட்டைகள், இரண்டு கனத்த சதுர அட்டைகள், தடிக் காகிதம் கொஞ்சம்.

**செய்யும் விதம்:** மேலேயுள்ள படங்களை முதலில் நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். பெட்டியின் ஒரு பாகத்தின் நடுவில் நீண்ட சதுரமாய் வெட்டிக் கொள்ளவேண்டும். அதன் பிறகு ஒரு மூலையில் நூல்கண்டு கட்டையில் பிலிம் சுருளைச் சுருட்டி, தடித்த காகிதத்தின் வழியே வரும்படியாக, காகிதத்தின் மேலும் கீழும் ஒட்டி விடுங்கள். படத்தில் காட்டியிருப்பதுபோல் இரண்டு கனத்த சதுர அட்டைகளை மேலும் கீழும் நூல்கண்டு சுழலும்படி வைக்கவேண்டும். இன்னொரு மூலை போய்ச் சேரும் இடத்திலும் கட்டையைக் குச்சியில் செருகி, பெட்டியில் பொருத்திவிடுங்கள்.

அவ்வளவுதான்; ஒரு புறம் ஸ்பூலைச் சுற்றினால் மற்றொரு புறத்திலிருந்து ?பிலிம் பிரிந்துகொண்டே வரும். நீண்ட சதுரமாய் அட்டையை வெட்டியுள்ள இடத்தில் படம் தெரியும். அருமையான வேடிக்கை; நல்ல பொழுதுபோக்கு.

திருச்சியில் கண்ணன் கழக விழா **26-1-'51** குடியரசு நாள் அன்று நடந்தது. அநேகமாய் எல்லா அங்கத்தினர்களும் வந்திருந்தார்கள். பல அங்கத்தினர்களுடைய பெற்றோர்களும் வந்து கலந்துகொண்டார்கள். தஞ்சாவூர், புதுக்கோட்டை, லால்குடி, குளித்தலை முதலான இடங்களிலுள்ள அங்கத்தினர்களும் வந்திருந்தார்கள். திருச்சியில் உள்ள பிரபலஸ்தர்கள், எழுத்தாளர்கள் எல்லாரும் விஜயம் செய்தார்கள். எல்லாரும் வந்திருக்கும்போது கூட்டம் அமோகமாய் வெற்றி பெறுவதற்குக் கேட்க வேண்டுமா? வெகு சிறப்பாக நடந்தது. வேடிக்கை என்ன, விளையாட்டுக்கள் என்ன, சிற்றுண்டி என்ன ஒரே அமர்க்களந்தான்! அந்தக் காட்சிகளை நமது போட்டோக்காரர் உங்களுக்காகப் பிடித்து வந்திருக்கிறார், பாருங்கள்!

கண்ணன் போட்டோ: சங்கர்

மூன்று மணிக்கே அங்கத்தினர்கள் கோஷ்டி கோஷ்டியாய் வர ஆரம்பித்துவிட்டார்கள்.

★

ஆன்பிள்ளைகள் ஒரு வரிசை, பெண்கள் ஒரு வரிசையாகச் சிற்றுண்டிக்கு க்யூவில் செல்லுகிறார்கள்.

ஜிலேபித தட்டைப் பார்ப்பதா, காமிராவைப் பார்ப்பதா?

★

"ரெடி? நான் சொல்வதை நன்ருகக் கவனிக்கவேண்டும்; சிரிக்கக்கூடாது" என்கிருர் விளையாட்டுப் போட்டி ஆசிரியர். ஜட்ஜிகள் நடுவில் நிற்கிருர்கள்.



பெண்களுக்கு நடந்த போட்டிகளில் 'ஸ்கிப்பிங்' போட்டியும் ஒன்று.

★

விகடக் கச்சேரியைக் குழந்தைகள் மட்டுமல்ல; பெற்றோர்களும் சுவாரஸ்யமாய் ரஸிக்கிறார்கள்.



கூட்டத்தில் எழுந்த சிரிப்பு நேஷனல் காலேஜையே ஓர் ஆட்டம் ஆட்டி வைத்துவிட்டது.

★

தலைவர் உட்கார்ந்திருக்க, ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அபிநயத்துடன் சிரிக்கச் சிரிக்கப் பேசிக்கொண்டிருக்கிறார்



# பச்சை நோட்டு

ச. ஸ்ரீ. நரசிம்மன்

### பாத்திரங்கள்

சங்சரன்: கலெக்டரின் மகன்.

மணி: போலீஸ் அதிகாரியின் பிள்ளை.

முத்து: கவர்மெண்டு வக்கீலின் பிள்ளை.

ஆறுமுகம்: பாங்கி மானேஜரின் பிள்ளை.

ராமு: வக்கீலின் பிள்ளை.

கந்தன்: பாங்கி பியூன் பிள்ளை.

[பாங்கி பியூன் கலெக்டர் வீட்டின் பின்னால் சிறிய அறையில் வசிக்கிறான். எல்லோரும் கலெக்டர் ஆபீஸைப் பார்த்து விட்டுத் திரும்புகிறார்கள்.]

சங்கரன்: அடே மணி, முத்து, நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. கோர்ட்டு விளையாட்டு விளையாடலாமா?

முத்து: அப்படியே செய்யலாம். நம்முடைய தகப்பனார்கள் எல்லாரும் நாளைக்கு மகாபலிபுரம் போகிறார்கள். திருடன் விளையாட்டுத்தானே? அதை ஆறுமுகம் வீட்டில் வைத்துக் கொள்ளுவோம். அவன் வீடுதான் கோர்ட்டு மாதிரி நன்றாயிருக்கிறது.

மணி: நான் சொல்லுகிறேன், கேளுங்கள். அவனவன் தகப்பனார் வேலையை அவனவன் ஏற்றுக்கொள்ள வேண்டும். சங்கரன் கலெக்டர். நான் போலீஸ் அதிகாரி. முத்து கவர்மெண்டு வக்கீல். ராமு திருடனுடைய வக்கீல். திருடன் யாருடா, தெரியவில்லையே?

கந்தன்: நான்தான் திருடன். திருடன் எங்கும் கிழிந்த சட்டை போட்டிருப்பான். என் வீட்டில் ஒரு கந்தல் கோட்டு இருக்கிறது. அதைப் போட்டுக் கொண்டு வருகிறேன்.

ஆறுமுகம்: அப்படியானால், நான்தான் பொருளைத் தொலைத்தவன். என் அப்பாதான் பாங்கி மானேஜர். நேற்று, "பச்சை நோட்டைக் காணோம். நீ கதவைத் திறந்து வைத்திருந்தாயா?" என்று என் தாயைத் திட்டிக்கொண்டிருந்தார் என் தகப்பனார். அந்த நோட்டு எனக்கு எழுத வாங்கிவந்திருப்பார். ஆதலால், அதையே திருடு போனதாய் வைத்துக்கொண்டு கேஸை நடத்துவோம். ஓர் அணா கொடுத்து இன்றே ஒரு பச்சை நோட்டு நான் வாங்கி வருகிறேன். நாளை பன்னிரண்டு மணிக்கு என் வீட்டுக்கு நீங்கள் வந்துவிட வேண்டும். மாடியில்தான் விளையாட்டு.

ஞாயிறு - மணி பன்னிரண்டு

கலெக்டர்: அடே, திருடா! பச்சை நோட்டைத் திருடின யல்லவா?

திருடன்: இல்லே சாமி! நான் திருடவே இல்லிங்கோ.

போ. அதிகாரி: அடே! என்னடா இப்படிப் பொய் சொல்லுகிறாய்? கையும் களவுமாய்ப் பிடித்திருக்கிறேன். சரி! இவனுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால்தான் சரியாய்ச் சொல்லுவான்.

திருடன்: ஐயோ சாமி! அடிக்காதேயுங்கள். நான் திருடவே இல்லே.

எதிரி வக்கீல்: என் கட்சிக்காரனைத் திருடன் என்று சொல்லக்கூடாது. இன்னும் கேசு ருஜுவாகவில்லே. எல்லாரையும் போலத்தான் அவனையும் நடத்தவேண்டும்.

கவர்மெண்டு வக்கீல்: கண்டிப்பாய்ச் சொல்லலாம். அதோ கையில் களவுபோன பொருள் தான் இருக்கிறதே. இதைவிட என்ன வேண்டும்?

எ. வக்கீல்: நிச்சயமாய்த் திருடினன் என்று நிரூபிக்க முடியுமா?

போலீஸ் அதிகாரி: இவன் திருடன்தான் ஸார். நான்தான் இவன் திருடும்போது பிடித்தேனே.

திருடன்: சாமி!நான் திருடவே இல்லீங்க.

கவர். வக்கீல்: நீ பெரிய மனிதன் என்று யாராவது உனக்குப பரிசு அளித்தார்களா?

எ. வக்கீல்: இது தப்பு. இம்மாதிரி கேட்கக் கூடாது.

கலெக்டர்: அடே! நீ திருடினயா? இந்தப் பச்சை நோட்டு உனக்கு எப்படிக் கிடைத்தது?

திருடன்: சாமி! நான் போய்க்கிட்டே இருந்தேன். கீழே விழுந்து கிடந்துச்சுங்கோ, எடுத்தேன். அதற்குள் இந்த ஐயா புடிச்சுட்டாருங்கோ.

எ. வக்கீல்: பார்த்தீர்களா அவன் சொல்லுவதை? இதனுல் அவன் திருடவில்லேயென்று தெரியவில்லேயா? ஆதலால் திருடன் என்று சொல்லக் கூடாது. சட்ட விரோதம்.

க. வக்கீல்: சுத்தப் பொய். இவன் திருடன்தான். கீழே கிடந்தது; எடுத்தேன் என்கிறுன். எடுத்தால் என்ன செய்ய வேண்டும்? கேளுங்கள்.

திருடன்: தெரியும் சாமி! போலீஸில் ஒப்பிக்க வேண்டும். எடுப்பதற்குள்தான் இந்த ஐயா புடிச்சிட்டாரே.

எ. வக்கீல்: இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்?

கலெக்டர்: குற்றம் ருஜுவாகும்வரை அவனைத் திருடன் என்று சொல்லவேண்டாம்.

க. வக்கீல்: அது கிடக்கட்டும். நீ ஏன் போலீஸ் ஐயாவைப் பார்த்து ஓடினய்? இது போதாதா, உன் குற்றத்தை நிரூபிக்க?

எ. வக்கீல்: ஆமாம், ஸார்! போலீஸ்காரரைக் கண்டால் நான்கூடப் பயந்து ஓடுகிறேன். அவன் சாது; நாட்டுப்புறத்தான். ஓடினதால் திருடன் என்று சொல்லிவிடலாமா?

பாங்கி ம்ானேஜர்: இவன் என் பச்சை நோட்டை மாத்திரம் திருடினனு? இன்னும் ஏதாவது

திருடியிருப்பான். இவன் கோட்டைச் சோதனை செய்யுங்கள்.

போலீஸ் அதிகாரி: (சோதிக்கிறார்) இதோ கவர் ஒன்றைத் திருடி இருக்கிறான். பழைய கவர் இதையும் எழுதிக் கொள்ளுங்கள். பாங்கி மானேஜர் விலாசந்தான் இதிலும் இருக்கிறது. அடே திருடா! எங்கே திருடினாய்? யாருடைய கவர்?

க. வக்கீல்: இந்த அழுக்குக் திருடன் என்று சொல்லக் கூடாதாம். இவன் அசல் திருடன்தான்.

வக்கீல்: இது சட்டப்படி தவறு. பழைய கவர். தபாலில் கவர் வந்தால், அதை உடைத்து உள்ளிருக்கும் காகிதத்தை எடுத்துக்கொண்டு, கவரை எறிந்துவிடுவார்கள். அந்த மாதிரி எறிந்த கவர். இதை எடுத்து வைத்துக் கொண்டதனால் திருடன் ஆகமாட்டான்.

போலீஸ் அதிகாரி: நான்தான் கையும் களவுமாய்ப் பிடித்து விட்டேனே.

திருடன்: சாமி, நான் திருடல்லே. கீழே கிடந்ததை எடுத்தேன். இந்த ஐயாவுடையது என்று எனக்கு எப்படித் தெரியும்?

எ. வக்கீல்: இதில் ஒரு முக்கிய விஷயம். இந்தப் பச்சை நோட்டில் பெயர் எழுதியிருந்தால் கண்டிப்பாய் என் கட்சிக்காரர் கொண்டு போய்க் கொடுத்திருப்பார். அதனால் அவர் பேரில் தப்பும் இல்லை.

(கலெக்டர் தீர்ப்பு எழுத உள்ளே சென்று மறுபடி கால் மணி கழித்து வருகிறார்.)

கலெக்டர்: (படிக்கிறார்) இந்தக் கேஸில் இவன் திருடன் என்று ருஜுவாகவில்லை. பச்சை நோட்டை எடுத்தது சரிதான். போலீஸ்காரன் வருவதைப் பார்த்ததும் போட்டுவிட்டு ஓடி விட்டான் இவன். நல்லெண்ணத்துடன்தான் எடுத்தான், அல்லது திருட்டுத்தனமாக எடுத்தான் என்பதோ ஏற்படவில்லை. ஆதலால் இந்தக் கேஸைத் தள்ளிவிடுகிறேன். சொத்துக்கு உடையவர், தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டியது.

பாங்கி மானேஜர்: (தலையைத் தொங்க வைத்துக்கொண்டு) என்னிடம் நோட்டு வாங்கினபில் இருக்கிறது. கவரின் மேல் என் விலாசம் இருக்கிறது.

கலெக்டர்: அப்படியானால் இதோ பெற்றுக்கொள்ளுங்கள். (கவரை நோட்டின் நடுவில் வைத்துக் கொடுக்கிறார். மானேஜர் அப்படியே வாங்கிக் கொள்ளுகிறார்.) இவனுடைய கட்டை அவிழ்த்துவிடுங்கள்.

போலீஸ் அதிகாரி: அப்படியே. (அவிழ்த்துவிடுகிறார்.)

[கோர்ட் கலைகிறது.]

காலம்: திங்கள் காலை. இடம்: கலெக்டரின் வீடு.

கலெக்டர்: நமஸ்காரம்; வர வேண்டும்!

பாங்கி மானேஜர்: நமஸ்காரம்! ஒரு வேடிக்கை. நம் பிள்ளைகள் கோர்ட்டு விளையாட்டு விளையாடினார்களாம். கந்தன் திருடனாய் வேஷம் போட்டானாம். அவன் கோட்டுப் பையில் இந்த நூறு ரூபாய் நோட்டு கவரில் வைத்திருந்ததாம். என் தொலைந்த நோட்டின் எண்ணும் இந்த நோட்டின் எண்ணும் ஒன்றாயிருக்கிறது. என் பாங்கி பியூன் முருகன் எடுத்திருக்கவேண்டும். அவனையும் கூப்பிட்டு அனுப்பியிருக்கிறேன். எவ்வளவோ நம்பிக்கை வைத்திருந்தேன். என்ன செய்தான், பார்த்தீர்களா? ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். உங்கள் இனிஷியல் போட்டு முந்தாநாள் தேதியும் போட்டிருக்கிறதே. அதனால் தான் உங்களைக் கேட்டுக் கொண்டு போலீஸில் தகவல் கொடுக்கலாம் என்று நினைத்தேன்.

கலெக்டர்: நல்லவேளை, ஸார்! முருகன் திருடவே இல்லை. நேற்றைய முன் தினம் முருகன் அதி காலையில் தெருவுக்கு வந்தான். நடுத்தெருவில் இந்த நோட்டுக் கிடந்ததாம். அதை எடுத்து வந்து என்ன செய்கிறது என்று கேட்டான். நான் யோசித்தேன். அவன் போலீஸுக்குத் தகவல் கொடுக்கிறேன் என்றான். "யாராவது இந்த விஷயம் தெரிந்துகொண்டு என்னுடையது என்பார்கள். மேலும் நாளை மகாபலிபுரம் போகவேண்டும். வந்து எழுதி வைக்கலாம். அது வரை இந்த நோட்டு உன்னிடமே இருக்கட்டும்" என்றேன். அவன் தன்னைத் திருடன் என்று பிடித்துக் கொள்ளுவார்கள் என்றான். நான் சாட்சி என்று என் இனிஷியலும் தேதியும் போட்

டேன். அதோ முருகனும் தன் பிள்ளையை அழைத்து வருகிறான். கேட்போம்.

பாங்கி மானேஜர்: நூறு ரூபாய் நோட்டை எங்கே வைத்தாய், என்ன நடந்தது?

முருகன்: ஐயோ! ஐயா கையெழுத்துப் போட்டு என்னிடம் கொடுத்தார். நான் அதைப் பழைய கவரில் போட்டு உயர ஆணியில் மாட்டியிருக்கும் கந்தல் கோட்டில் வைத்தேன்.

பாங்கி மானேஜர்: இப்பொழுது தெரிந்துகொண்டேன். நேற்றைய முன்தினம், நான் வரும்போது இரவு ஒரு நூறு ரூபாய் நோட்டைத் தொலைத்து விட்டேன். வீட்டில் என் மனைவியின் அஜாக்கிரதையால் வந்தது என்று அவளைத் திட்டினேன். அதை என் பையன் கேட்டுக் கொண்டிருந்தான். இரவு வந்ததும், "அப்பா இனி அம்மாவைத் திட்டாதே. நான் கேஸ் பண்ணி, இதோ பச்சை நோட்டைக் கொண்டுவந்தேன். உன் பேருள்ள கவர் வேறு கொண்டு வந்தேன்" என்றான். பச்சை நோட்டு என்றதே எழுதும் நோட்டு என்று நினைத்துக் கொண்டான். பச்சை நோட்டை வாங்கி வந்து விளையாடினார்களாம். முருகா! உன்னைத் தப்பாக நினைத்தேன். மன்னித்து விடு. உன்னால் எனக்கு லாபம்.

கலெக்டர்: யார், யார் என்ன என்ன வேஷம் போட்டுக் கொண்டார்கள்?

முருகன்: அவனவன் தன் தகப்பனார் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டான். என் பையன் திருடன் வேஷம் போட்டான். அதனால்தான் இவ்வளவு.

கலெக்டர்: என் பையன் என்ன தீர்ப்புக் கூறினான்?

பாங்கி மானேஜர்: "நோட்டில் பெயர் எழுதப்படவில்லை. பெயர் எழுதியிருந்தால் சொந்தக்காரரிடம் கொடுத்திருப்பான். பழைய கவர், வீதியில் கூடக் கிடக்கும். அதைக் கொண்டு நாம் திருடன் என்று சொல்லுவது தவறு" என்று தீர்ப்புக் கூறினானாம்.

கலெக்டர்: அதுதான் நியாயம். நம்மைக் காட்டிலும் பையன்கள் என்ன அழகாய்த் தீர்ப்புக் கூறினார்கள்? அடுத்த ஞாயிற்றுக்கிழமை இவர்களுக்கு ஒரு விருந்து நடத்துவோம்.



அம்மா வாத்து: எங்கே இப்படிப் புறப்பட்டு விட்டாய்?

வாத்துக் குஞ்சு: பள்ளிக்கூடத்துக்கு!

அம்மா வாத்து: வேகமாய்ப் போ. மழை வரும்போலிருக்கு. அப்புறம் மழையிலே நனைஞ்சால் ஜலதோஷம் புடிச்சிக்கும்.

# விசித்திர ராஜ்யம்

ச. கு. கணபதி ஐயர்

ஒரு நாள் மாலை நான் ஒரு சிங்காரத் தோட்டத்துக்குப் போயிருந்தேன். அங்கே ஒருவர் அல்லி அரசாணி மாலை என்னும் புத்தகத்தை இனிய ராகத்துடன் வாசித்துக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றிலும் சிலர் புல் தரையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

'அல்லி அரசாணி!
அம்மா துரைசாணி
ஆக்கினைகள் செய்தே
அரசாளும் துரைராணி'

-என்று வாசிப்பவர் பாடிய போது என் மனம் அல்லி ராணியின் ராஜ்யத்துக்குப் பறந்தோடிப் போய்விட்டது.

அல்லி ஒரு பெண். அவள் ராஜ்யத்தில் உத்தியோகம் செய்துவந்தவர் எல்லாரும் பெண்களே. அங்கே ஆண்களுக்கு அதிகாரமே கிடையாது. பெண் பட்டாளத்தைத் துணையாக வைத்துக்கொண்டு அல்லிராணி கெட்டிக்காரத்தனமாக அரசாண்டு வந்தாள். அவள் இட்டது சட்டம். அவள் ஆணையை எவரும் மீற முடியாது.

இதை நினைத்தபோது எனக்கு வேறு ஒரு ராஜ்யத்தின் நினைவு வந்தது. இந்த ராஜ்யமும் பெண்களுடையதே. ஒரு ராணியே அதற்கும் தலைவி. ஆனால் இவள் ஒருவித அதிகாரமும் செய்வதில்லை. சாப்பிடுவதும் குழந்தைகளைப் பெறுவதும்தான் அவளுடைய வேலை. அல்லி ராஜ்யத்தில் இருந்ததுபோல் இந்த ராஜ்யத்திலும் பெண்களே எல்லா வேலைகளையும் கவனித்து வருகிறார்கள். ராஜ்யம் ஒழுங்காகவும் செவ்வையாகவும் நடந்து வருவது இந்தப் பெண்களால்தான்.

அவர்களுடைய அரண்மனை பொன்போல் மஞ்சள் நிறமாக விளங்கும். அது உப்பரிகை உப்பரிகையாக அமைந்தது. ஒவ்வோர் உப்பரிகையிலும் ஆறு கோணமுள்ள அறைகள் பல இருக்கின்றன. மேலே உள்ள அறைகள்தான் கஜானா. பாட்

டாளிப் பெண்கள் ராஜ்யம் முழுவதும் தேடிப்போய் அங்கங்கே கிடைக்கும் அரிய பொக்கிஷங்களை கஜானாவுக்குக் கொண்டுவந்து சேர்ப்பார்கள். ராணி அந்தப் பொக்கிஷத்தை உபயோகிப்பாள். குழந்தைகளைப் பெற்றுக் குவிப்பாள். பாட்டாளிகள் அந்தக் குழந்தைகளை வளர்த்து வருவார்கள்.

இந்த ராஜ்யம் எது என்று உங்களுக்குப் புரிகிறதா! புரிய வைக்கிறேன். நான் இருந்த இடம் சிங்காரத்தோட்டம் என்று சொன்னேன் அல்லவா! அங்கே 'ஙொய்' என்ற சப்தம் எங்கிருந்தோ கேட்டது. சப்தம் வரும் பக்கம் தேடிப் போனேன். ஒரு மரத்தின் மேல் தேன்கூடு ஒன்றைக் கண்டேன். தேனீக்களின் சப்தம்தான், 'ஙொய், ஙொய்' என்று கேட்டது.

ஒரு தேனீ அருகே இருந்த ஒரு பூவின்மேல் வந்து உட்கார்ந்தது. அந்த ஈ பூவுக்கு ஒரு தொந்தரவும் கொடாமல் அதிலுள்ள மகரந்தத்தை எடுத்துச் சென்றது. மற்றொரு தேனீ தேனை எடுத்துச் சென்றது. தன் பொருளைத் தேனீக்கள் எடுத்துச் செல்வதில் பூவுக்கும் சந்தோஷமே!

தேனீக்கள் மரங்களிலும் மறைவான வேறு இடங்களிலும் கூடு கட்டுகின்றன. மலர்களிலிருந்து அவை எடுத்துச் செல்லும் மகரந்தத்தை மெழுகாக்கி அவை கூட்டை அமைக்கும். பல அடைகளால் ஆனது கூடு. மேலே உள்ள அடைகளில் தேனீக்கள் தேனைச் சேர்த்துவைக்கும். கீழே உள்ள அடைகளில் தேனீ முட்டைகளை இடும்.

தேனீக்களில் ராணி ஈ, பாட்டாளி ஈ (வேலை செய்யும் ஈ), சோம்பேறி ஈ என மூன்று வகை உண்டு. இந்த மூன்றில் சோம்பேறி ஈதான் ஆண். மற்றவை பெண்கள். பாட்டாளி ஈக்கள் வேலை செய்து செய்து, சிறியவைகளாக மாறிவிட்டன. ஒரு வேலையும் இல்லாத ராணி ஈயே பெரியது. ஒரு கூட்டில் ஒரு ராணியே இருக்கும். பாட்டாளி ஈக்கள் ஆயிரக் கணக்கில் இருக்கும். சோம்பேறி ஈக்கள் குறைச்சல். இவை கூட்டில் சில காலமே

ராணி ஈ

பாட்டாளி ஈ

சோம்பேறி ஈ

இருக்கும். பிறகு வேலை செய்யும் ஈக்கள் சோம்பேறி ஈக்களை விரட்டி ஓட்டி விடும்; கொன்று போடுவதும் உண்டு.

ராணி ஈ தன் ஆயுளில் ஒரு நாள் சிறிது நேரமே ஒரு சோம்பேறி ஈயுடன் சேர்ந்து உலாவச் செல்லும். இரண்டும் வெகு தூரம் சென்று கிறு கிறு என்று சுழன்று சுழன்று விளையாடும். அப்பொழுது சோம்பேறி ஈ செத்துவிடும். பிறகு ராணி ஈ கூட்டுக்குத் திரும்பி விடும். பாட்டாளி ஈக்கள் அதற்கு ராணி என்று பட்டம் கட்டித் தங்கள் ராணிக்காக ஆயுள் முழுவதும் உழைத்து வரும்.

கூடு கட்டுவது, தேனையும் மகரந்தத்தையும் கொண்டு வருவது, ராணி ஈ இடும் முட்டைகளைப் பாதுகாப்பது, சிறிய தேனீக்களை வளர்ப்பது முதலிய காரியங்களை ஒழுங்காகவும் சுறு சுறுப்பாகவும் மகிழ்ச்சியுடனும் பாட்டாளி ஈக்கள் செய துவருகின்றன.

இந்த இயற்கையான தேனீக் கூட்டைப்பற்றியும் தேனீக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் அறிந்து கொண்ட விஞ்ஞானிகள் தேனீக்களை வீட்டிலும் தோட்டங்களிலும் வளர்க்கும் உபாயத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவைகள் வசிப்பதற்குக் கூடுகளையும தயாரித்திருக்கிறார்கள். செயற்கைக் கூடு (Bee-Hive) எங்கேயாவது இருந்தால் அதைப் பாருங்கள். அதன் ஒவ்வொரு பாகத்தையும் நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

செயற்கைக் கூட்டில் தேன் அடைகளை வைத்து ஒரு ராணி ஈயையும் சில வேலைக்கார ஈக்களையும் பிடித்து வந்து அதில் விட்டால் அவை அங்கேயே சந்தோஷமாக வாழும். தேனைச் சேர்க்கும். வருஷத்தில் இரண்டு தடவை நமக்குத் தேன் கிடைக்கும்.

கூடு இருக்கும் இடத்தில் மரம் செடி கொடிகளும் பயிர்களும் இருக்கவேண்டும். ஈக்கள் ஒரு மைல் தூரம் வரையில் தேனையும் மகரந்தத்தையும் நாடிப் போகும். அவை வழிதப்பிப் போவதே இல்லை. இந்த ஒரு மைல் தூரமே 'தேனீக்களின் மேய்ச்சல் நிலம்' எனப்படும்.

இந்த மேய்ச்சல் நிலமே தேனீக்களின் ராஜ்யம். கூடே அவைகளின் அரண்மனை. ராணி ஈயே இந்த ராஜ்யத்தின் அரசி. முன்பு எப்போதோ ஒரு காலத்தில் இருந்ததாம் அந்த அல்லி ராஜ்யம். ஆனல் இந்த விசித்திர ராஜ்யம் எந்தக் காலத்திலும் இருந்து கொண்டே இருக்கும். இந்த எண்ணத்துடன் சிங்காரத் தோட்டத்திலிருந்து திரும்பி வந்தேன்.

# கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(P) 195. பத்மநாபன், A., ஐயனேரி. 196. பத்மநாபன், G., ஜலகண்டபுரம். 197. பால்ராஜன், பாளையங்கோட்டை. 198. பெருமாள், T., பண்டபம் காம்ப். 199. பிரேம் பியாரன், தே. கல்லுப்பட்டி. 200. பழனிசாமி, A. A., அம்பத்தூர். 201. பரமேஸ்வரன், A., கண்டி. 202. பிரேமா, A. P., டில்லி. 203. பால், K. J., கோயம்புத்தூர். 204. பிரேமா, P., சாம்பல்பூர். 205. பத்மாவதி, சௌந்தரவல்லி, ராஜகோபாலன், V., சூலூர். 206. பரமேஸ்வரன், கோபாலகிருஷ்ணன், ஹரிஹரன், C. S., மேட்டூர் அணை. 207. பொன்னம்பலம், A., ஆலங்துறை.

(R) 151. ராமசந்திரன், தமயந்தி, N., அமராவதிபுதூர். 152. ராசப்பன், K.P., கோடங்கிப்பட்டி. 153. ராஜாமணி, N., சங்கரநயினார்கோயில். 154. ராமன், G. S., மேட்டூர் அணை. 155. ராமசேஷன், T. R., சென்னை-11. 156. ராமகிருஷ்ணன், பாலசுப்பிரமணியன், K., ரங்கநாதபுரம். 157. ரகுநாதராவ், T. S., மேட்டூர் அணை. 158 ராமலிங்கம், S. S., சுமைதாங்கி. 159. ராமநாதன், S., சென்னை-10. 160. ராமமூர்த்தி, R., மேலூர். 161. ராமன், V. K., விழுப்புரம். 162. ரெஜின் மேரி, சாமிநாதன், M. L., பாபநாசம். 163. ராதாகிருஷ்ணன், K., செரியாம்பாளையம். 164. ராமசந்திரன், B., திருவையாறு. 165. ரஸாக், M. S. M., கொழும்பு-11. 166. ரமணி, ராமசந்திரன், உஷா, T. V., சென்னை-2. 167. ரகுராமன், V., திருச்சிராப்பள்ளி. 169. ராமமூர்த்தி, S. G., கோயம்புத்தூர். 170. ராஜாராமன், ராஜு, கமலா, இந்து, K. R., கும்பகோணம். 171. ராமதாஸ், L. B., பெங்களூர். 172. ராமசக்திரன், சக்குபாய், N., சென்னை-5. 173. ராஜகோபாலன், ராமசந்திரன், S., தஞ்சாவூர். 174. ராஜசேகரன், R., காஞ்சிபுரம். 175. ராமசந்திரன், T., சென்னை-21. 176. ருக்மிணி, R., கல்யாண். 177. ராஜகோபால், R. K., அனந்தப்பூர். 178. ரமாமணி, R., சென்னை-4. 179. ராமமூர்த்தி, G., சென்னை-20. 180. ராஜகோபாலன், P. N., நல்லாடை. 181. ராஜு, உமா, நடேசன், N., வளவனூர். 182 ராஜம், K. V., மதுரை. 183. ராஜரத்தினம், S., திருநள்ளார். 184. ராஜன், துரைசாமி, ஆறுமுகம், N., மணலூர்பேட்டை. 185. ராஜகோபால், சந்திரசேகரன், வத்ஸலா, R., பம்பாய்-19. 186. ரகுநாதன், P., அம்மங்குடி. 187. ராஜம், P., திருவொற்றியூர். 188. ராமமூர்த்தி, நடராஜன், T. K., பம்பாய்-19. 189. ரகுராமன், R., பம்பாய்-19. 190. ராதாபாய், R., மதுரை. 191. ராமானுஜலு, சகுந்தலா, கண்ணன், S. K., வேலூர். 192. ராஜகோபாலன், R. S., கும்பகோணம். 193. ரங்காச்சாரி, C. S., கரூர். 194. ராஜேந்திரன், A., வீரவநல்லூர். 195. ராமதாஸ், V., காரைக்குடி. 196. ரிஷிகேசன், ஈஸ்வரன், B., கும்பகோணம். 197. ராகவன், R., மாயூரம். 198. ரங்கநாதன், S. P., சிறுவயல். 199. ராஜன், A. J. S., பாளையங்கோட்டை. 200. ரகுராமன், A. V., சென்னை-4. 201. ராமலிங்கம். C. N., மதுரை. 202. ராம்ஜி, சரோஜா, சகுந்தலா, W., கல்கத்தா-29. 203. ராஜேஸ்வரி, V., நாகூர். 204. ராமலிங்கம், S. M., காளிதீர்த்தன் குப்பம். 205.

ராமன், சுப்புலக்ஷ்மி, K. V., மதுரை. 206. ராஜகோபால், பீளமேடு. 207. ராமமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, J. C., ஆத்தூர்.

(S) 161. சரளா, D., சென்னை-17. 162. சாரதாதேவி, கங்காதேவி, விஜயலக்ஷ்மி, அப்புலுதேவி, டியூல்பரா, ஒரிஸ்ஸா. 163. சாரதா, V., பம்பாய்-19. 164. சாரதா, ராமமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, தாராபுரம். 165. சாரநாதன், ராமமூர்த்தி, N., பாபநாசம். 166. ஸரஸா, M. ஔரேலியா. 167. சுபாஷ்சந்திரன், சங்கரன்கோயில். 168. சாமிப்பிள்ளை, K. R., நல்லூர். 169. சாமிய்யா, V., வலங்கைமான். 170. சரோஜா, ராமசாமி K. A., காணியூர். 171. சரோஜாதேவி, சாரதா தேவி, மல்லாகம். 172. சரோஜா, R., ராஜபாளையம். 173. சரோஜா, G. T. சென்னை - 7. 174 சுகந்தநாதன், J., மாயூரம். 175. சுகவனம், S., சேலம். 176. செங்கோடன், K., அருவாய்ப்பட்டி. 177. சசிதேவி, N., செங்கல்பட்டு. 178. சுதர்சன், ஸ்ரீ சைலம், R., பம்பாய்-19. 179. சுதர்சனராவ், J., சென்னை-2. 180. சாத்தப்பன், C., கொழும்பு. 181. சாரங்கபாணி, தர்மராஜன், சுவர்ணலதா, பெங்களூர்-1. 182. சோமு, M., திருவேங்கடநாதபுரம். 183. சோமதேவசர்மா, S., கோப்பாய். 184. சோமசுந்தரம், திருபுரசுந்தரி, T. S., சென்னை - 17. 185. சோமவர்மா, R., பெங்களூர். 186. சோமாஸ்கந்தன், R., திருவாரூர். 187. சேதுலக்ஷ்மி, T. R., சென்னை - 17. 188, சேதுமாதவன், செல்வராஜன், கோயம்புத்தூர். 189. சேதுமாதவன், V. G., காவேரிப்பட்டினம். 190. சேதுராமன், K., திருச்சிராப்பள்ளி. 191. சேதுராமன், K. J., புதுக்கோட்டை. 192. சேதுராமன், T.N., கல்கத்தா - 1. 193. சேதுராமன், C. R., கிருஷ்ணகிரி. 194. சகுந்தலா. S, பெங்களூர். 195. சகுந்தலா, T. R., தஞ்சாவூர். 196. சகுந்தலா-ராமன், கிருஷ்ணன், புதுடில்லி. 197. சகுந்தலா, வேதவல்லி, M., திருநெல்வேலி. 198. சகுந்தலை, A., கம்பளை. 199. சகுந்தலா, V., விழுப்புரம். 200. சகுந்தலா, லக்ஷ்மி, ராஜேஸ்வரி, தரம்பேட், நாகபுரி. 201. சம்பந்தம், கிருஷ்ணராஜுலு, A., விழுப்புரம். 202. சுகுமார், தேவராஜீ, R., குடியாத்தம். 203. சுகுமார், K., மேல்தாம்பரம். 204. சுகுமார், P. C., சென்னை - 20. 205. சியாமளா, சந்திரசேகரன், லக்ஷ்மிநாராயணன், A. R., புதுடில்லி. 206. சியாமளாதேவி, சென்னை - 20. 207. சியாமளா, சேஷகிரிராவ், கல்கத்தா. 208. சூரியநாராயணன், ராஜகோபால், சாந்தாபாய், S., புதுடில்லி. 209.

இங்கே கத்தரியுங்கள்.

**கண்ணன் கழகம்**

**அங்கத்தினர் பதிவு கூபன்**

(கட்டணம் இல்லை)

பெயர் ..........................

விலாசம் ..........................

..........................

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

மார்ச் '51 கூபன் செ.

சூரியநாராயணன், N., சிதம்பரம். 210. சூரியநாராயணன், A., திருவிடைமருதூர். 211. ஸ்டேனிஸ் இக்னேஷியஸ், வடக்கான்குளம். 212. சிலுவியாஸ், N., திண்டுக்கல். 213. சத்தியபால், S., அன்பநாதபுரம். 214. சத்தியபாமா, கிருஷ்ணசாமி, A., புதுடில்லி. 215. சத்தியபாமா, C. S., பாளையங்கோட்டை. 216. சத்தியபாமா, யாழ்ப்பாணம். 217. சத்தியமூர்த்தி, K., மதுரை. 218. சந்தியாகு, M., ரக்குவானு. 219. சுந்தரராஜலு, K., ரங்கூன். 220. சுந்த்ரராஜன், K. S., தேவகோட்டை. 221. சுந்தரராஜன், A., மதுரை. 222. சுந்தரராஜன், K., புதுக்கோட்டை, 224. சுந்தரராஜன், K., புதுக்கோட்டை. 225. சுந்தரராஜன், R., அம்பாலங்கோடா. 226. சந்தானம், P. S., வேலூர். 227. சந்தானம், K., புதுடில்லி, 228. சந்தானம், V., புதுக்கோட்டை. 229. சந்தானகிருஷ்ணன், நீரஜா, V., திருப்பாதிரிப்புலியூர். 230. சந்தானம், N., தஞ்சாவூர். 231. சந்தானம், K., செங்கம. 232. சந்தானம், S, கீழக்கரை. 233. சந்தானகிருஷ்ணன், பார்த்தசாரதி, V. L., சென்னை - 1. 235. சதானந்தன், P., சாவகச்சேரி. 236. சத்தியநாராயணராவ், சிவசங்கரராவ், மணிபாய், வாணியம்பாடி. 237. சுப்பையன், R., புதூர். 238. சுப்பையா, S., திருநெல்வேலி. 239. சுப்பராவ், R., ஈரோடு, 240. சுப்பையா, சந்திரலேகா, S., மதுரை. 241. சுப்பையா, M., நல்லாடை. 242. சுப்பையன், N., வெள்ளக்கோயில். 243. சுப்பையா, A., பேட்டை. 244. சுப்பையா, K, R. M., சண்முகநாதபுரம். 245. சாமிநாதன், வைகுண்டராமன், சண்முகவேல், M., ஸ்ரீ வைகுண்டம். 246. சாமிநாதன், S., சென்னை - 4. 247. சாமிநாதன், விழுப்புரம். 248. சாமிநாதன், M. S., புதுக்கோட்டை. 249. சண்முகம், T., புதுச்சேரி. 250. சண்முகம், P. T., பரங்கிப்பேட்டை. 251. சண்முகசுந்தரம், P., மணப்பாறை. 252. சண்முகம், P., கோயம்புத்தூர். 253. சண்முகம், A., சோளிங்கபுரம். 254. சண்முகம், S., கொழும்பு-11. 255. சண்முகசுந்தரம், P. T. S., டிக்கோயா. 256. சண்முகம், J., சென்னை -18. 257. சண்முகம், S. G., புதுச்சேரி. 258. சண்முகசுந்தரம், K. N., கருவம்பாளையம். 259. சண்முகம், S. A., சூலூர். 260. சண்முகம், K., திருவண்ணாமலை. 261. சண்முகம், M., கோயம்புத்தூர். 262. சண்முகம், லீலாவதி, T. S., சென்னை - 1. 263. சண்முகம், N., கோயம்புத்தூர். 264. சண்முகம், G., கோயம்புத்தூர்.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★ ★★★★★

# கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★ ★★★★★

# ஏரிக்கரை மாளிகை

மகேந்திரன்

அதோ பார்த்தீர்களா! அந்த ஏரிக்கரையில் பிரம்மாண்டமான அரசமரம் ஒன்று தெரிகிறதல்லவா? இன்னும் அருகில் போய்ப் பாருங்கள். மரத்தினுள் மரம் முளைத்திருப்பதைப் போல ஒரு வேப்பமரமும் தெரிகிறது. அந்தி வெயிலிலே தகதகவென்று அவற்றின் இலைகள் அசைந்தாடிக்கொண்டிருக்கின்றன. என்ன அருமையான பள்ளத்தாக்கு!

இப்படி அரசும் வேம்பும் சேர்ந்து வளர்ந்துள்ள மரங்களை நீங்கள் பல இடங்களில் பார்த்திருக்கலாம். இருந்தாலும் இந்த மரங்களுக்கு ஒரு கதை உண்டு. அதைச் சொன்னால் முதலில் நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனால் கட்டாயம் அதிசயத்தில் மூழ்கிப் போவீர்கள்; ஆனந்தப்படுவீர்கள். கடைசியாக ஏன் இப்படியும் நடந்திருக்க முடியாது என்று நம்ப ஆரம்பித்துவிடுவீர்கள்.

இந்த மரங்கள் எவ்வளவோ காலமாய் இந்த ஏரிக்கரையில் இருந்து வருகின்றன. அதற்கு முன்பு இந்த இடம் எப்படி இருந்தது தெரியுமா? எனக்கும் சொல்லக் கேள்விதான். அதோ வட்டம் போல மேகத்தோடு மேகமாய்த் தெரிகிறதே மலைகள், அந்த ஆறேழு மைல்கள் சுற்றளவுக்கு இங்கே பெரிய கிராமம் ஒன்று இருந்தது. தோட்டங்களும் சோலைகளும் வயல்களும் வீடுகளும் நிறைய இங்கே இருந்தன. உலகத்திலேயே மிகச் செழிப்பான பூமியாக இருந்தது இது. அதற்கும் முன்பு, அதாவது உலகம் உண்டான புதிதில் சமுத்திரத்துடன் சேர்ந்த பெரிய ஏரியாக இருந்தது. அப்புறம் நாளாக நாளாக ஏரி ஜலம் வற்றிப் போய் அந்த இடத்தில் மனிதர்கள் வசிக்கலானார்கள். நிலத்தை உழுதும் பண்படுத்தியும் மரங்களை வளர்த்தும் மாடுகளை மேய்த்தும் அந்த இடத்தைப் பூலோக ஸ்வர்க்கமாக்கி

விட்டார்கள். அந்தப் பழைய ஏரி இருந்த சோடே இல்லை. அந்த இடத்தில் ஓர் ஓடைமட்டும்தான் இருந்தது.

இவ்வளவு அருமையான இடத்தில் வசிப்பவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகளாக இருக்கவேண்டும்! ஆனால் அவர்கள் இப்படிப்பட்ட அருமையான இடத்தில் வசிக்கத் தகுந்த நல்ல ஜனங்களாக இல்லை. மகா கொடிய சித்தம் உள்ளவர்கள். அவர்கள் குழந்தைகளோ, கேட்க வேண்டியதேயில்லை. எமன்களும் நமன்களும்தான்! ஊரில் புதிதாக ஒருவன் நுழைந்துவிட முடியாது. ஓடையில் ஒரு வாய்த் தண்ணீரைப் பருகி விடமுடியாது. கல்லைவிட்டு எறிவார்கள்; அம்பை எய்வார்கள். வேட்டை நாய்களை ஏவிவிட்டு விரட்டுவார்கள். கும்பலாகச் சூழ்ந்துகொண்டு மேலே விழுந்து ஹிம்சிப்பார்கள். இவ்வளவும் ஏழை எளியவர்களைக் கண்டால்தான். யாராவது பிரபுக்கள் தேர்மீது ஏறி ஆளும் படையுமாக விருதுகளுடன் வரட்டும், அப்பொழுது பார்க்க வேண்டுமே. அவர்களுக்கு இவ்வளவு அவ்வளவு மரியாதை என்று கிடையாது; அப்படி ராஜோபசாரம் செய்வார்கள்.

ஆயினும் இந்தக் கிராமத்துக்கு ஒதுப்புறமாய், கொஞ்சம் மேட்டுப் பாங்கான இடம் இருந்தது. அங்குதான் சலமிலன், சலமிலன் என்று வயதான கிழவன் ஒருவன் இருந்தான். சுற்று வட்டாரத்திலுள்ளவர்களுக்கு அவன் பெயர் மட்டும் நன்றாகத் தெரியும். முள்ளிலே முளைத்த ரோஜாவைப் போல அவன் ஒருவன்தான் நல்லவனாக இருந்தான். அவன் மனைவியோ அவனைவிட நல்லவளாக வாய்த்திருந்தாள். அவர்களுக்குப் பிள்ளை குட்டி ஒன்றும் கிடையாது. அவர்களுக்கு ஒரு குறைவுமில்லை. முடிந்த வரையில் நிலங்களில் பாடுபட்டு அவர்கள் தங்களுக்கு வேண்டியவற்றைப் பயிரிட்டு வந்தார்கள்.

ஒரு நாள் சாயங்கால நேரத்தில் அவர்கள் வழக்கம் போல் குடிசைக்கு முன்னால் இருந்த மரங்களின் நிழலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று நாய்கள் குரைக்கும் சத்தமும் பையன்களின் ஆரவாரமும் 'சூ சூ!' என்ற விரட்டலும் காதைத் துளைத்தன.

சலமிலன் திடுக்கிட்டுத் தன் மனைவியைப் பார்த்து, "உல்கா! யாரோ அதிதிகள் போலிருக்கிறது! இல்லாவிட்டால் இப்படிக் கூச்சல் கேட்காது" என்றான்.

"ஆமாம், அதோ!" என்று கிராமம் இருந்த திசையைச் சுட்டிக் காட்டினாள் உல்கா.

இரண்டு பால சந்நியாசிகள் ஓட்டமும் நடையுமாக முன்னால் வர, சிறுவர்களும் வேட்டைநாய்களும் அவர்களைத் துரத்துவதைச் சலமிலன் கண்டான். அவனுக்கு இருப்பே கொள்ளவில்லை. "சரி; நான் போய்ப் பார்த்து அவர்களை இங்கே அழைத்து வருகிறேன். நீ அவர்களுக்குச் சாப்பாட்டுக்கு ஏதாவது இருக்கிறதா, பார்!" என்று சொல்லிவிட்டு, கிராமப் பாதைக்கு இறங்கி வந்தான்.

சந்நியாசிகளில் இளையவன் கையில் தண்டம் ஒன்று வைத்திருந்தான். அதனால் தங்களைத் துரத்தியவர்களை அவன் விரட்டி ஓட்டிக்கொண்டிருந்தான். சலமிலன், "ஐயா, வாருங்கள். இந்த எளிய

வனுடைய குடிசைக்கு வந்துவிடுங்கள்!'' என்று வரவேற்றான்.

பால சந்நியாசிகள் இருவரும் சலமிலனைத் திரும்பிப் பார்த்தார்கள். கிராமத்தார்களுக்காக மன்னிப்புக் கேட்கும் முகத்துடன் சலமிலன் அவர்களைப் பார்த்து மீண்டும், ''இன்று இரவு எங்களுடனேயே தங்கிவிட்டுக் காலையில் போகலாம்'' என்று அழைத்தான்.

''ஏன் கிழவரே! இவ்வளவு நல்லவராய் இருந்தும் இந்தக் கொடிய ஜனங்கள் வசிக்கும் இடத்தில் இருக்கிறீரே, ஏன்?'' என்று கேட்டான் இளைய சந்நியாசி.

அந்தச் சந்நியாசிகளின் முகத்தில் பால் வடிந்தது. லேசாகத் தாடியும் மீசையும் வளர்ந்திருந்தன. கண்களில் ஒளி வீசிக்கொண்டிருந்தது. உடைகள் கிழிந்தும் சேருகியும் போயும் அவர்கள் முகத்தில் வாட்டமே தென்படவில்லை.

உல்காவும் அவர்களை உள்ளன்புடன் வரவேற்றாள். ஆசனம் கொடுத்து ஆசவாசப்படுத்தினாள். ''நாங்கள் மிகவும் ஏழைகள். இருந்தாலும் இரவு இங்கே தங்கி நாங்கள் அளிக்கும் எளிய உணவை உண்ண வேண்டும்'' என்று அன்பாகக் கூறினாள்.

பால சந்நியாசிகள் இருவரும் ஆசிரமம் போன்று குளிர்ச்சியும் அழகும் நிறைந்த அந்தக் குடிசையின் வாயிலில் இருந்த பாறை ஒன்றில் உட்கார்ந்துகொண்டார்கள். இளைய சந்நியாசி கையிலிருந்த தண்டத்தை அருகில் வைத்தான். ஆனால் அது தத்தித் தத்திப் பறந்து சென்று எதிர்ப் பாறையில் போய்த் தானாகவே சாய்ந்துகொண்டது.

சலமிலன் இந்த அற்புதத்தைக் கண்டு பிரமித்துப் போனான். அதற்குள் மூத்த சந்நியாசி அவனைப்

பார்த்து, ''பெரியவரே! இந்தக் கிராமம் இருந்த இடம் முன்பு ஓர் ஏரியாக இருந்தது; இல்லையா?'' என்று கேட்டான்.

''அப்படித்தான் சொல்லுகிறார்கள்'' என்றான் சலமிலன்.

''இனியும் அப்படியே ஏரியாக இருப்பதுதான் நல்லது! கடவுளின் அருளை மறந்த ஜனங்களுடைய குடிசைகளின்மீது ஏரி ஜலம் மோதுவது எவ்வளவு அழகாய் இருக்கும்!'' என்றான் மூத்த சந்நியாசி. அவன் முகத்தில் இருந்த கம்பீரத்தைக் கண்டு சலமிலன் திகைத்துப் போனான்.

அந்தச் சமயத்தில் பேரிடி போன்ற சத்தம் ஆகாய வெளியில் கேட்டது. இடியும் மின்னலும் உருண்டோடின. காற்று, சண்டமாருதமாய் வீசிற்று. ஆனால் அந்தக் குடிசையில் ஒருவித மாறுதலும் தென்படவில்லை.

உல்கா விருந்தினர்களுக்கு வேண்டிய ஆகாரங்களைச் செய்தாள். கொம்புத்தேன் கொஞ்சம் இருந்தது. தினைமா கொஞ்சம் இருந்தது. பால்கூடக் கொஞ்சமாகத்தான் இருந்தது. இவற்றைக் கொண்டு எப்படிப் பசியோடு வந்திருக்கும் விருந்தினர்களுக்குப் படைப்பது என்று அவள் சஞ்சலப்பட்டாள்.

அவள் மிகுந்த மனவியாகுலத்தோடு வந்து, ''நீங்கள் பசியோடு வந்திருக்கிறீர்கள். ஏதோ எங்களால் முடிந்ததைத் தயாரித்திருக்கிறேன். அதை உண்டு பசியாற வேண்டும்'' என்று அடக்கத்துடன் உபசரித்தாள்.

அஸ்தமித்து, இருள் சூழ்ந்து ஒரு நாழிகைக்குமேல் ஆகிவிட்டபடியால் பால சந்நியாசிகள் இருவரும் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு மனையில் உட்கார்ந்திருந்தார்கள். உல்கா தினைமாவைப் படைத்து, பாலையும் கிண்டியிலிருந்து ஊற்றிவைத்தாள். உண்மையில் அவள் வைத்த பால் தலைக்கு ஒரு வாய்க்குக் கூட வராது. சலமிலன் தோட்டத்திலிருந்து பழுத்திருந்த இரண்டு வெள்ளரிப் பழங்களைக் கொண்டு வந்து வைத்தான்.

அதிதிகள் மாவைத் தின்றார்கள். பழத்தை உறித்துத் தின்றார்கள். பால சந்நியாசிகளில் இளையவனுக்கு மாவைத் தின்றதால் விக்கல் எடுத்தது. அவன் தனக்கு வைத்திருந்த பாலை ஒரே வாயில் குடித்துவிட்டு, ''தாயே, இன்னும் கொஞ்சம் பால் இருந்தால் இதில் ஊற்றுங்கள்'' என்றான். முதலிலேயே அவனுடைய கூரிய கண்கள் கிண்டியில் பால் இல்லை என்பதைக் கவனித்துவிட்டன. உல்கா கையைப் பிசைந்தாள். பால சந்நியாசி தண்டத்தை எடுத்து அந்தக் கிண்டியில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு, ''என்ன யோசிக்கிறீர்கள்? கொஞ்சம் இருந்தால் போதும். நீங்கள் ஊற்றுங்கள்'' என்றான்.

உல்கா கிண்டியைச் சாய்த்தாள். என்ன ஆச்சரியம்! கிண்டியின் மூக்கு வழியாகப் பால் வழிந்தது. அவனுடைய பாத்திரம் நிரம்பி, மூத்த சந்நியாசியின் பாத்திரமும் நிரம்பிவிட்டது. தினைமாவோ தட்டிலிருந்து எடுக்க எடுக்கக் குறையாமல் இருந்தது. உல்காவும் சலமிலனும் ஆச்சரியத்தால் பிரமித்துப் போனார்கள். முதலில் கிண்டியில் பால் இருந்ததைச் சரியாகக் கவனிக்கவில்லையோ என்றுகூடச் சந்தேகப்பட்டாள் உல்கா. ஆனால் அவ

ளுடைய சந்தேகம் தீர்ந்துவிட்டது. பல தடவை பாலை ஊற்ற ஊற்ற, அதிலிருந்து பால் வற்ருமல் வந்துகொண்டே இருந்தது. அவர்கள் சாப்பிட்டது போக மீதியைத் தம்பதிகள் வயிறு நிரம் பச் சாப்பிட்டார்கள்.

உல்கா சலமிலனைத் தனியாக அழைத்து, "இது என்ன அதிசய மாயிருக்கிறது! எனக்குத்தான் கண்கள் சரியாகத் தெரியவில்லையா? அல்லது இவர்கள் ஏதாவது தெய்வப் பிறவிகளா?" என்று கேட்டாள்.

"உல்கா! இவர்கள் சாமானியமானவர்கள் அல்ல என்றுதான் நானும் நினைக்கிறேன். ஆண்டவனுடைய இச்சையை நாம் என்ன கண்டோம்!" என்ருன் சலமிலன்.

பால சந்நியாசிகள் இருவரும் குடிசை வாயிலில் படுக்கை தயாரித்தார்கள். சலமிலன் தங்களுடைய மரப் பலகைகளை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு அவனும் உல்காவும் தரையில் படுத்துக் கொண்டார்கள். அவர்களிடம் பேசி அவர்கள் யார், இதெல்லாம் எப்படி நடந்தன என்று கேட்டுத் தெரிந்துகொள்ள சலமிலன் எண்ணிஞன். ஆஞல் மூத்த சந்நியாசியின் முகத்தைப் பார்த்ததும் அதைக் கேட்கும் தைரியம் அவனுக்கு ஏற்படவில்லை.

இளைய சந்நியாசி மட்டும், "என்ன கிழவரே, தூங்கி விட்டீரோ?" என்று விசாரித்தான். அதன் பிறகு இருவரும் வெகு நேரம்வரையில் பேசிக்கொண்டிருந்தார்கள். இளைய சந்நியாசியின் பேச்சு வேடிக்கை வேடிக்கையாக இருந்தது. "தாத்தா—உங்களுக்கு ஏதாவது ஆசை உண்டா?" என்று கேட்டான் அவன்.

சலமிலன் சிரித்துவிட்டு, "ஆசையா? உண்டு. நானும் உல்காவும் இத்தனை வருஷங்கள் சேர்ந்து வாழ்ந்து விட்டோம். இறக்கும் பொழுதும் நாங்கள் இருவரும் சேர்ந்து இறக்கவேண்டும். இதைத் தவிர எங்களுக்கு வேறு ஆசை எதுவும் இல்லை" என்றான்.

மறுநாள் பொழுது விடிந்ததும் பால சந்நியாசிகள் இருவரும் பிரயாணத்துக்கு ஆயத்தமானார்கள். மூத்த சந்நியாசி சலமிலனைப் பார்த்து, "பெரியவரே, உங்களுடைய அன்பையும் உங்கள் அதிதி உபசார சிந்தையையும் கண்டு எங்கள் உள்ளம் பூரிக்கிறது. உங்களுடைய உள்ளத்தைப் போன்ற பிரம்மாண்டமான மாளிகையாக உங்கள் குடிசை வளரட்டும்" என்று தண்டத்தை எடுத்து, பூமியைத் தட்டினான். என்ன ஆச்சரியம்! பார்த்துக் கொண்டிருக்கும்போதே காலைச் சூரியனுடைய ஒளியில் அந்தக் குடிசை பிரம்மாண்டமாக வளர்ந்து தகதகவென்று பிரகாசித்தது.

"அடடா, இந்த ஊர்க்காரர்கள் இதைக் கண்டால் எவ்வளவு திருந்திவிடுவார்கள். அதிதிகளை அன்புடன் உபசரிப்பதனால் இத்தகைய விந்தை உண்டாகும் என்பது தெரிந்தால் அவர்களும் எவ்வளவு நல்லவர்கள் ஆகிவிடுவார்கள்!" என்று சலமிலனுடைய கனிந்த உள்ளத்திலிருந்து வார்த்தைகள் வந்தன.

"தாத்தா, தாத்தா! அவர்கள் இனிமேல் மனிதர்களாக இருந்தால் அல்லவா திருந்தப்போகிறார்கள்! அந்த அவசியமே இல்லாமல் போய் விட்டதே!" என்றான் இளைய சந்நியாசி.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்றான் சலமிலன்.

"அதோ திரும்பிப் பாருங்கள்!"

சலமிலனும் உல்காவும் திரும்பிப் பார்த்தார்கள். கங்கு கரை தெரியாதபடி நேற்றுவரை கிராமமாக இருந்த அந்தப் பிரதேசம் பெரிய ஏரியாக இருந்தது. ஏரி ஜலத்தின் அலைகள் தென்றலில் அசைந்து சலசலவென்று கரையில் வந்து மோதி மோதிச் சென்றன. சலமிலனுடைய பொன் மாளிகையின் பிம்பம் வெகு கம்பீரமாக அந்த ஏரி ஜலத்தில் பிரதிபலித்தது.

"அடடா, இதென்ன கொடுமை!" என்று அலறினான் சலமிலன். அப்பொழுதுதான் முதல் நாள் இரவு இடியும் காற்றும், மழையும் மின்னலும் வீசிய ஞாபகம் அவனுக்கு வந்தது. "கருணையே தெரியாத ஜனங்கள் வசிக்கும் ஊருக்குப் பதிலாக நல்ல ஏரி இருப்பது எவ்வளவு அழகாக இருக்கும்" என்று முதல் நாளைப் போலவே ஏரியைப் பார்த்துக் கொண்டே சொன்னான் மூத்தவன்.

"ஆனால், ஆனால்...என் கிராமச் சகோதரர்கள்..." என்று வார்த்தையை முடிக்க முடியாமல் தடுமாறினான் சலமிலன். அவனுடைய கருணை மிகுந்த கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

"அந்த ஏரியில் அவர்கள் இப்பொழுது மீன்களாக இருக்கிறார்கள்!" என்றான் மூத்த சந்நியாசி.

"இந்தக் கண்ணராவியைப் பார்த்துக்கொண்டு நாங்கள் எப்படி இங்கே வசிப்போம்?" என்று சலமிலனும் உல்காவும் வருத்தப்பட்டார்கள்.

"உங்களுடைய ஒரே ஆசையை நிறைவேற்றிவிட்டால் உங்களுக்குத் திருப்திதானே?" என்று கேட்டான் இளைய சந்நியாசி.

"இன்றே, இப்பொழுதே" என்று கதறினன் சலமிலன், என்ன தான் கொடியவர்களாக இருந்தாலும் அவர்கள் மனிதர்கள் தானே என்ற எண்ணத்துடன்.

மூத்த சந்நியாசி தண்டத்தைத் தூக்கினன். அடுத்த கணம் அங்கு யாருமே இல்லை. தம்பதிகள் நின்ற இடத்தில் அரசமரமும் வேப்பமரமும்தான் இணைந்து நின்றன.

குளிர்ச்சி பொருந்திய நிழலை அந்த மரங்கள் இன்றும் என்றும் அந்த வழியாக வரும் பிரயாணிகளுக்குக் கொடுத்துக்கொண் டிருக்கின்றன. அந்த இலைகளின் சலசலப்பை நன்ருகக் கவனியுங்கள். "வருக! களைப் படைந்த பிரயாணிகளே, வருக! இங்கே அருமையான ஏரி ஜலம் இருக்கிறது. தாக சாந்தி செய்து விட்டு எங்கள் நிழலில் உட்கார்ந்து களைப்பாறிவிட்டுச் செல்லுங்கள்" என்றுதான் அந்த இலைகள் சல சலக்கின்றன. உயிரோடு இருந்த போது எவ்வளவோ விருந்தினர்களை உபசரித்ததுபோல அவர்கள் இறந்தும் உபசரிக்குப்படி அவர்கள் வாழ்வு பயன் பெற்றது. இதுதான் இந்த மரங்களின் கதை. இதோ, இங்கே அருகில் வந்து பாருங்கள். அவர்கள் பெயரை யாரோ ஒரு பாதசாரி என்றும் அழியாமல் இருக்கும் பொருட்டு மரத்தோடு மரமாக வளரும்படி பொறித்திருக்கிறன். தெரிகிறதா? ஏரியில் பொன்போன்று தெரியும் அந்த மாளிகை இன்று இல்லாவிட்டால் என்ன? அப்படி உன்னத வாழ்வு வாழ்ந்த சலமிலன்-உல்கா இவர்கள் இருந்திருக்க மாட்டார்களென்று யாரால் தான் சொல்லமுடியும்?

## மூடக் கழுதை

காட்டிலே ஒரு கழுதையும் கோழியும் சிநேகமாக இருந்தன. அதே காட்டில்தான் வனராஜனை சிங்கமும் இருந்தது. எல்லா மிருகங்களையும் விடச் சிங்கந்தானே பலசாலி? ஆனல் கோழி, 'கொக்கரக்கோ' என்று கூவினல் அதற்கு ஒரே பயம். எங்கேயாவது ஓடி ஒளிந்து கொள்ளும்.

ஒரு நாள் கழுதையும் கோழியும் ஒன்ருகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அப்போது அந்த வழியே சிங்கம் சென்றது. கழுதையைப் பார்த்ததுமே சிங்கத்தின் நாக்கில் ஜலம் சொட்டியது. உடனே அதன் மேல் பாய்ந்தது. இன்னும் சில நிமிஷங்களில் கழுதை சிங்கத்துக்கு இரையாகி விடும். ஆனல் திடீரென்று கோழி, 'கொக்கரக்கோ' என்று உரக்கக் கூவத் தொடங்கியது. அந்தப் பயங்கரக் கூச்சலைக் கேட்டதுமே சிங்கம் கழுதையை விட்டுவிட்டு, ஒரே ஓட்டமாக ஓடத் தொடங்கியது. கழுதை மெல்ல எழுந்தது; ஓடும் சிங்கத்தைக் கண்டது. தன்னைக் கண்டுதான் சிங்கம் பயந்து ஓடுகிறது என்று அது நினைத்துக்கொண்டது. உடனே சிங்கத்தைத் துரத்தத் தொடங்கியது.

கொஞ்ச தூரம் போனதும் சிங்கம் ஓடுவதை நிறுத்தித் திரும்பிப் பார்த்தது. தன்னைக் கழுதை ஒன்று துரத்தி வருவதைக் கண்டு சிங்கம் நின்றது. கழுதையும் நின்றது. சிங்கத்தின் முன் கழுதை நிற்க முடியுமா? அதன்மீது சிங்கம் பாய்ந்தது; அதைக் கிழித்தது; ரத்தத்தை உறிஞ்சியது. பாவம், மூடக் கழுதை தன் உயிரை இழந்தது.

—ஈசாப் கதை.

# சிங்கமும் கழுதையும்

'சோமசன்மா'

ஒரே ஒரு காட்டில் ஒரு சிங்கம் இருந்தது. அதற்கு ரொம்பவும் வயதாய் விட்டபடியால் காட்டில் போய் வேட்டையாடி மிருகங்களைக் கொல்ல முடியவில்லை. 'குடு குடு' கிழமாய் இருந்தால் யாரால்தான் ஓடி ஆடி வேட்டையாட முடியும்? அதனால் அந்தக் கிழட்டுச் சிங்கம் என்ன செய்யலாம் என்று ஆலோசனை பண்ணிற்று. அதற்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை. கடைசியில் தன்னுடைய மந்திரியான குள்ள நரியைக் கூப்பிட்டு என்ன செய்யலாம் என்று கேட்டது.

குள்ள நரி வெகு நேரம் யோசனை பண்ணிற்று. கடைசியில் ஒரு வழி சொல்லிற்று:

"மகாராஜா! எங்கேயாவது போய் ஒரு வில்லும் அம்பும் சம்பாதித்துக்கொண்டு வருகிறேன். அதை வைத்துக்கொண்டு ஒரு மரத்தடியில் ஒளிந்திருந்து, மிருகங்களைப் பார்த்துக் குறிவைத்துச் சுட்டு விடுங்கள். தினம் ஒரு மிருகமாகக் கொன்றுவிட்டால் சாப்பாட்டுக் கவலை இல்லை."

"அதெப்படி முடியும்? எனக்குத்தான் கையெல்லாம் நடுங்குகிறதே. நான் எப்படிக் குறி வைக்க முடியும்? வேறு வழி ஏதாவது சொல்லு!" என்றது சிங்கம்.

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது, மகாராஜா!" என்றது நரி.

"என்ன?" என்றது சிங்கம்.

"நீங்கள் ஏன் சுத்த சைவமாக மாறிவிடக் கூடாது? மான், மாடு இவைகளெல்லாம்

புல்லைத் தின்கின்றனவே, அவைகளைப் போல் நீங்களும் புல் பூண்டுகளைத் தின்றால் என்ன? நான் நல்ல கீரையாகக் கொண்டு வருகிறேன். உடம்புக்கும் நல்லது; போகிற வழிக்கும் புண்ணியம் உண்டு, என்ன?'' என்றது குள்ள நரி.

அதைக் கேட்ட சிங்கத்துக்குக் கோபமாக வந்தது. "போடா முட்டாள்! குள்ள நரி என்றால் தந்திரத்தில் கெட்டிக்காரன் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். நீ சுத்த முட்டாள்! எங்கள் ஜாதி என்ன! குலம் என்ன! இவ்வளவு நாள் எனக்கு மந்திரியாய் இருந்தும், உனக்கு இது தெரியவில்லையே? இன்று முதல் உன்னை மந்திரி வேலையிலிருந்து நீக்கப் போகிறேன்'' என்று கர்ஜித்தது அது.

உடனே குள்ள நரி, "மகாராஜா! மன்னிக்க வேண்டும். இன்று சாயங்காலத்துக்குள் உங்களுக்குத் திருப்தியான ஆகாரம் கொண்டு வராவிட்டால் நானாகவே இந்த வேலையை ராஜீநாமாச் செய்து விடுகிறேன். இது சத்தியம்! விட்டேன்!'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பிற்று.

நரி சிங்கத்தின் முன்னால் சொல்லி விட்டதே யொழிய வெளியில் வந்ததும் அதற்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை. எவ்வளவோ பேரைத் தந்திரம் செய்து ஏமாற்றியிருக்கும் அந்த நரிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. வீட்டுக்கு வந்ததும் பெண்டாட்டியை டீ போட்டுக் கொடுக்கச் சொல்லி, அதைக் குடித்துவிட்டு ராத்திரி முழுவதும் தூங்காமல் உட்கார்ந்து கொண்டு யோசனை செய்தது. டீ செலவானதுதான் மிச்சம்; வழி ஒன்றும் பிறக்கவில்லை.

கடைசியில் நரிப் பெண்டாட்டிதான் ஒரு சுலபமான வழி சொல்லிற்று. அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் ஒரு பெரிய கழுதை தினமும் வந்து மேய்வது வழக்கம். அதைப் பிடித்துக்கொண்டு போய்ச் சிங்கராஜாவிடம் விட்டுவிட்டால், சிங்கத்துக்கு ஒரு வாரத்துக்குச் சாப்பாடு ஆகும் என்று யோசனை சொல்லிற்று அது.

ஆனால் கழுதையை எப்படிக் கூட்டிக் கொண்டு போவது? நரியைக் கண்டாலே அது ஒரு மைல் தூரம் விலகி ஓடுமே? ஆகையால், "அது முடியாத காரியம்'' என்று சொல்லிற்று குள்ள நரி.

பெண்டாட்டி: ஏன் முடியாது! நீங்கள்தான் தந்திரத்தில் கெட்டிக்காரராச்சே. இந்தக் கழுதையை ஏமாற்ற ஒரு தந்திரம் அகப்படவில்லையா?

நரி: அந்தக் கழுதைப் பயலுக்கு மூளையே கிடை

பேஷ்!" என்று பெண்டாட்டியின் கையைப் பிடித்துச் சுளுக்கிக் கொள்ளும் வரையில் குலுக்கிற்று.

அதன்பிறகு குள்ள நரி என்ன செய்தது, தோட்டத்துக்குப் போய்ப் பார்த்தது. அங்கே கழுதை மேய்ந்துகொண்டிருந்தது. அதன் பக்கத்தில் போய் நின்றுகொண்டு, "நமஸ்காரம் அண்ணு!" என்றது.

யாது. அதனுல் என்னிடம் பேசினுலே ஏதாவது தந்திரம் செய்து ஏமாற்றிவிடுவேனே என்று பயப்படுகிருன். நீதான் ஒரு தந்திரம் சொல்லேன்.

பெண்டாட்டி: சொல்லுகிறேன்! அந்தக் கழுதைக்கு ஒரு பிள்ளை இருக்கிறது. அதற்குச் சிங்கராஜாவின் மகளைக் கல்யாணம் செய்யப் போவதாய்ச் சொல்லுங்கள். அவனே சந்தோஷமாகக் கத்திக் கொண்டு ஓடி வருவான். அவ்வளவுதான். பாக்கு வெற்றிலை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லி, சிங்கராஜாவின் குகைக்குள் அழைத்துக் கொண்டு போய் விட்டுவிடுங்கள். அவ்வளவுதான்!

அதைக் கேட்ட குள்ள நரிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "அடியே! உன்னைப் போல் கெட்டிக்காரி இந்த உலகத்திலேயே இல்லை! பேஷ்;

இது வந்ததைக் கவனிக்காமலே கழுதை மேய்ந்துகொண்டிருந்தது. அப்போது குள்ள நரி, "ஆமாம் அண்ணு, என்னுேடு இனிமேல் நீங்க பேசுவீங்களா? உங்களுக்குப் பெரிய இடத்துச் சம்பந்தம் ஏற்படப்போகிறது!" என்றது.

அதற்கு அப்புறம் கழுதையால் பேசாமல் இருக்க முடியவில்லை. கனைத்துக்கொண்டே, "என்ன அப்பா சொல்கிருய்?" என்று கேட்டுக்கொண்டே பக்கத்தில் வந்தது.

"ஆமாம் அண்ணு! சிங்கராஜா உங்க பிள்ளைக்குத் தன் பெண்ணைக் கொடுக்கப் போருராம்" என்றது நரி.

"என்ன அப்பா விளையாடுகிருய்? என்னைப் பார்த்தால் உனக்குக் கேலியாயிருக்

புல்லைத் தின்கின்றனவே, அவைகளைப் போல் நீங்களும் புல் பூண்டுகளைத் தின்றால் என்ன? நான் நல்ல கீரையாகக் கொண்டு வருகிறேன். உடம்புக்கும் நல்லது; போகிற வழிக்கும் புண்ணியம் உண்டு, என்ன?" என்றது குள்ள நரி.

அதைக் கேட்ட சிங்கத்துக்குக் கோபமாக வந்தது. "போடா முட்டாள்! குள்ள நரி என்றால் தந்திரத்தில் கெட்டிக்காரன் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். நீ சுத்த முட்டாள்! எங்கள் ஜாதி என்ன! குலம் என்ன! இவ்வளவு நாள் எனக்கு மந்திரியாய் இருந்தும், உனக்கு இது தெரியவில்லையே? இன்று முதல் உன்னை மந்திரி வேலையிலிருந்து நீக்கப் போகிறேன்" என்று கர்ஜித்தது அது.

உடனே குள்ள நரி, "மகாராஜா! மன்னிக்க வேண்டும். இன்று சாயங்காலத்துக்குள் உங்களுக்குத் திருப்தியான ஆகாரம் கொண்டு வராவிட்டால் நானாகவே இந்த வேலையை ராஜீநாமாச் செய்து விடுகிறேன். இது சத்தியம்! விட்டேன்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பிற்று.

நரி சிங்கத்தின் முன்னால் சொல்லி விட்டதேயொழிய வெளியில் வந்ததும் அதற்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை. எவ்வளவோ பேரைத் தந்திரம் செய்து ஏமாற்றியிருக்கும் அந்த நரிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. வீட்டுக்கு வந்ததும் பெண்டாட்டியை டீ போட்டுக் கொடுக்கச் சொல்லி, அதைக் குடித்துவிட்டு ராத்திரி முழுவதும் தூங்காமல் உட்கார்ந்து கொண்டு யோசனை செய்தது. டீ செலவானதுதான் மிச்சம்; வழி ஒன்றும் பிறக்கவில்லை.

கடைசியில் நரிப் பெண்டாட்டிதான் ஒரு சுலபமான வழி சொல்லிற்று. அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் ஒரு பெரிய கழுதை தினமும் வந்து மேய்வது வழக்கம். அதைப் பிடித்துக்கொண்டு போய்ச் சிங்கராஜாவிடம் விட்டுவிட்டால், சிங்கத்துக்கு ஒரு வாரத்துக்குச் சாப்பாடு ஆகும் என்று யோசனை சொல்லிற்று அது.

ஆனால் கழுதையை எப்படிக் கூட்டிக் கொண்டு போவது? நரியைக் கண்டாலே அது ஒரு மைல் தூரம் விலகி ஓடுமே? ஆகையால், "அது முடியாத காரியம்" என்று சொல்லிற்று குள்ள நரி.

பெண்டாட்டி: ஏன் முடியாது! நீங்கள்தான் தந்திரத்தில் கெட்டிக்காரராச்சே. இந்தக் கழுதையை ஏமாற்ற ஒரு தந்திரம் அகப்படவில்லையா?

நரி: அந்தக் கழுதைப் பயலுக்கு மூளையே கிடை

?" என்று கேட்டது
தை.

"இல்லே அண்ணு! நான் சத்தியமாகச் சொல்கிறேன். விட்டேன்!"

"போடா போ பைத்தியம்! சிங்கராஜா தன் மகளே ஒரு கழுதை மகனுக்குத்தான் கொடுப்பாரா? உனக்கு மூளேக் கோளாறுதான் ஏற்பட்டிருக் கிறது."

"சரி! இப்போ என்கூட வந்தால் உண்மை தெரிந்து போகிறது. உங்களே அழைத் துப் போகத்தான் வந்தேன. மகாராஜா இன்று மணம்பேச வேண்டும்; வெற்றிலே பாக்கு மாற்றிக்கொள்ள வேண்டும்" என்று நரி சொன்னதும் கழுதை நம்பிவிட்டது. என்ன இருந்தாலும் அது கழுதை தானே!

உடனே, "நான் போய் என் சம்சாரத்திடம் சொல்லிவிட்டு வருகிறேன்" என்றது அது.

"சம்சாரத்திடம் அப்புறம் சொல்லிக்கொள்ளலாம். நல்ல வேளேக்குள் போய்க் காரி யத்தை முடித்து விடவேண் டும். வாருங்கள்" என்று நரி அவசரப்படுத்தவே, அசட்டுக் கழுதையும் கூடப் போயிற்று.

சிங்கத்தின் குகை வாசலுக் குப் போனதும் கழுதைக்குச் சந்தேகமாக இருந்தது. ஏனென்ருல் வாசலில் ஒரு கோலம்கூடப் போடவில்லே.

ராமு: நகத்தைக் கடிக்கும் பழக் கத்தை நிறுத்துவது ரொம்பச் சுலபம்.

மணி: உன் அநுபவத்திலிருந்து சொல்லுகிருயா?

ராமு: ஆமாம்; ஆயிரம் தடவை நிறுத்தியிருக்கிறேன்!

---

மாவிலேயாவது கட்ட வேண் டாமா? அதுவும் இல்லே. கல்யா ணம் என்ருல் கோலம்போட்டு மாவிலே கட்டவேண்டாமா? நரி தன்னே வஞ்சகமாக ஏமாற்றிக் கொல்லுவதற்குத் தான் அழைத்து வந்திருக் கிறது என்று அது உடனே தெரிந்துகொண்டுவிட்டது.

அது தயங்கித் தயங்கி நின்றுகொண்டிருக்கையி லேயே குகைக்குள்ளேயிருந்து சிங்க ராஜாவே வெளியில் வந்தது. கழுதையைக் கண் டதும் அது, "வாருங்கள்! சம் பந்திக் கழுதையாரே!" என்றது.

இடுப்பில் ஒரு பட்டுக்கரை வேஷ்டிகூட இல்லாமல் வந்து நின்ற சிங்கத்தைக் கண்டதும் கழுதை உண்மையைத் தெரிந்துகொண்டுவிட்டது.

உடனே சட்டென்று திரும்பி, "மகாராஜா! மன்னிக்கவேண்டும். வீட்டில் போய் என் பெண்டாட்டியையும் அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று திரும்பி ஓட ஆரம்பித்தது.

சிங்கம் மட்டும் விட்டுவிடுமா? அதுவும், "கழுதையாரே! நில்லும், நில்லும்!" என்று கூவிக்கொண்டே கழுதையின்மேல் பாய்ந்தது.

ஆனால், பாவம்! அந்தச் சமயத்தில் ஓர் அரசமரத்து அதன் காலில் தடுக்கவே தொபீரென்று கீழே விழுந்தது. அவ்வளவுதான்! கழுதை ஒரே ஓட்டமாக ஓடிவிட்டது. ஏமாந்த சிங்கம் கீழே விழுந்து விட்டு எழுந்திருக்க முடியாமல் பேந்தப் பேந்த விழித்தது.

ஆகையால், பிள்ளைகளே! சிங்கம் என்னதான் பசித்தாலும் புல்லைத் தின்னாது என்பதும், எவ்வளவுதான் ஒருவன் அசடாக இருந்தாலும் ஆபத்துச் சமயத்தில் அவனுக்கும் புத்தி வந்துவிடுகிறது என்பதும், இதனால் தெரிகின்றன அல்லவா?

# பூனைப் பெண்

ராஜாஜி

[இந்த அருமையான கதையைக் குழந்தைகளுக்காக நமது ராஜாஜி 'சங்கர்ஸ் வீக்லி' விசேஷ மலரில் எழுதியிருந்தார். அதைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ஸ்ரீ தி. ஜ. ர.]

அம்மாவிடம் பத்மாவுக்கு ரொம்பக் கோபம். இன்னும் கொஞ்சம் உப்புமாக் கேட்டாள் அம்மாவை. அம்மா கொடுக்கவில்லை. "இனி மேல் சாப்பிட்டால் உன் உடம்புக்கு ஆகாது" என்று சொல்லிவிட்டாள். இதுதான் பத்மாவுக்குக் கோபம்.

பூனையும் அதன் மூன்று குட்டிகளும் விளையாடிக் கொண்டிருந்தன. அம்மாப் பூனையைக் குட்டிகள் தொந்தரவு செய்துகொண்டேயிருந்தன. அம்மாப் பூனை கொஞ்சங்கூடச் சீறவில்லை; குட்டிகள் படுத்தும் பாட்டைப் பார்த்துச் சந்தோஷமாகவே இருந்தது.

"குட்டிகளிடம் இந்தப் பூனை எவ்வளவு பிரியமாக இருக்கின்றது! அம்மாவும் அப்பாவும் என்னிடம் இப்படிப் பிரியம் காட்டினால் என்ன? உப்புமா என்றால் எனக்கு ரொம்ப ஆசை. அதை இன்னும் கொஞ்சம் கேட்டால், கொடுகக முடியாது என்கிறாள் அம்மா. ஏன்?" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள் பத்மா.

சின்னஞ் சிறு பத்மாவை ஒரு தேவதை பார்த்துக் கொண்டிருந்தாள். "பத்மாக் கண்ணு; நீ ஒரு பூனைக் குட்டியாக மாற இஷ்டமா?" என்று தேவதை கேட்டாள்.

"இஷ்டந்தான்" என்றாள் பத்மா.

"அப்படியே உன்னை மாற்றி விடுகிறேன். தன் குட்டியாக உன்னை ஏற்றுக்கொள்ள, ஒரு பூனை தயாராயிருக்கிறது" என்றாள் தேவதை.

உடனே பத்மா ஒரு பூனைக் குட்டியாக மாறிவிட்டாள். பக்கத்துக் கிராமத்தில் ஒரு வீடு. அதிலே ஒரு பூனை இருந்தது. அதன் குட்டிகளில் ஒன்றாகப் பத்மா மாறி விட்டாள். அந்தப் பூனைக்கு மொத்தம் ஐந்து குட்டிகள். அவைகளில் பத்மாதான் மிகவும் அழகான குட்டி.

அம்மாப் பூனை, அக்காப் பூனை, தங்கச்சிப் பூனை இவைகளோடு விளையாடிக்கொண்டு ஆனந்தமாயிருந்தாள் பத்மா.

ஆனால் பத்மாவின் நிஜ அம்மா ரொம்பவும் வருத்தப்பட்டாள். தெருவிலே போகிறவர் வருகிறவரை யெல்லாம் பார்த்து, "என் கண்மணி பத்மாவைக் கண்டீர்களோ?" என்று கேட்டாள். எவரும் காணவில்லை என்று சொல்லி விட்டார்கள்.

அம்மாவுக்கு மகா கவலையாய்ப் போய்விட்டது. காளி தேவியின் கோயிலுக்கு அம்மா போனாள். உருக்கமாகப் பிரார்த்தித்தாள். "தாயே, என் கண்மணி பத்மாவை வீட்டுக்குத் திரும்பிவரச் செய். அவள் எவ்வளவு உப்புமாக் கேட்டாலும் கொடுக்கிறேன்" என்றாள்.

அழுது அழுது மறுபடியும் மறுபடியும் பிரார்த்தித்தாள். காளி தேவிக்கு ரொம்பவும் பரிதாபமா யிருந்தது. பத்மாவின் அம்மாவுக்கு முன்னே பிரத்தியட்சமானாள்.

"தாயே, என் கண்மணி பத்மாவைத் திரும்பி வரச் செய்" என்று பத்மாவின் அம்மா கதறினாள்.

"அசட்டுப் பெண்மணியே, உன் மகள் பத்மா பூனைக் குட்டியாய் மாற ஆசைப் பட்டாள். அப்படியே மாறி விட்டாள். சந்தோஷமாய் இருக்கிறாள். நீ அவளிடம் கடுமையாக நடந்து கொண்டாய்" என்றாள் காளிதேவி.

"நான் இனிமேல் அவளைப் பார்க்கவே முடியாதா?" என்று கேட்டாள் பத்மாவின் அம்மா.

"பார்க்கலாம். ஆனால், நீ இரண்டு தேங்காய் கொண்டு

வரவேண்டும். அவைகளை இங்கே உடைக்கவேண்டும். கோயில் வாசலில் சில குழந்தைகள் விளையாடுகின்றன. அவைகளுக்கு அந்தத் தேங்காய்த் துண்டுகளை வழங்க வேண்டும். இல்லாவிட்டால் பத்மாவை நீ பார்க்க முடியாது" என்று காளிதேவி சொன்னாள்.

பக்கத்துக் கடைக்கு ஓடினாள் பத்மாவின் அம்மா. இந்தக் காலத்தில் தேங்காய் மிகவும் கிராக்கி. இருந்தாலும் பத்மா திரும்பி வரவேண்டுமே. இந்தக் கவலை, அம்மாவுக்கு. கடைக்காரன் கேட்ட விலையைக் கொடுத்தாள். தேங்காயோடு கோயிலுக்குத் திரும்பி வந்தாள்.

"காளிதேவி, இந்தக் காணிக்கையை ஏற்றுக்கொள். என் கண்மணியைத் திரும்பிவரச் செய்" என்றாள். தேங்காயை உடைத்தாள். தேங்காய்த் துண்டுகளை எடுத்துக் கொண்டு வெளியேபோனாள். கோபுர வாசலில் சில பையன்கள் கோலி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் ஆளுக்கு ஒரு துண்டு வழங்கினாள். பையன்கள் தேங்காய்த் துண்டைப் பல்லால் கரண்டித் தின்றார்கள். கொட்டாங்கச்சியை ஒருவர்மேல் ஒருவர் விட்டெறிந்து விளையாடினார்கள். அப்போது அங்கே ஒரு கிழவன் வந்தான். "கொட்டாங்கச்சியைக் கீழே போடாதீர்கள். யார் காலிலாவது குத்திவிடும்" என்றான். கொட்டாங்கச்சியைப் பெருக்கித் தள்ளினான். அப்புறந்தான் பையன்கள் இந்த விளையாட்டை நிறுத்தினார்கள்.

பத்மாவின் அம்மா வீடு திரும்பினாள். வீட்டிலே ஒரு கதவு மூலையில் பத்மா நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். முன்னே கோபம் வந்த போதும், இந்த மூலையில்தான் பத்மா ஒளிந்துகொண்டாள்.

"என் கண்ணே!" என்று கூச்சலிட்டாள் பத்மாவின் அம்மா. பத்மாவை அப்படியே வாரியெடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். அம்மாவுக்கு ரொம்ப ரொம்பஆனந்தம் பொங்கியது.

"இதோ பார், பத்மா. பூனைக் குட்டியாக இருப்பது நல்லதில்லை. நீ பெரிய பூனையாக வளரும்போது எலியைத் தின்னவேண்டி வரும்" என்றாள் அம்மா.

"ஐயே! கசுமலமான எலியையா? நான் தின்ன மாட்டேன்" என்றாள் பத்மா.

எலி ரொம்ப ஆபாசந்தான். ஆனால், பூனைக்கு எலிதான் ரொம்பப் பிடிக்கிறது. எலியைப் பிடித்து அது தின்னுகிறது. நமக்கோ உப்புமா, பணியாரம், வாழைப்பழம் இதெல்லாந்தான் பிடிக்கும். செல்வக் குழந்தைகளே, பூனையாகி, எலியை உணவாகக் கொள்ள உங்களுக்குப் பிடிக்குமா? பிடிக்காதே. அப்படியானால் வீட்டிலே கோபித்துக் கொண்டு 'உம்' என்று முகத்தை வைத்துக்கொள்ளாதீர்கள். அம்மாவுக்கு முத்தம் கொடுங்கள். ஒரு போதும் துஷ்டத்தனம் செய்யாதீர்கள்.

---

தாத்தா: உன் வயசுக்கெல்லாம் ஜட்ஜாக இருந்த முத்துஸ்வாமி ஐயர் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணிவிட்டார்! நீ மூன்றாவது பாரம்கூட எட்டிப் பார்க்கவில்லையே.

பேரன்: உன் வயசுக்கெல்லாம் அவர் ஜட்ஜாக இருந்தாரே. நீ முன்சீப்பாகக்கூட இல்லையே!

## செல்லம் தந்த கண்ணன்

சென்னைக்குப் போனேன்
செல்லத்தைப் பார்த்தேன்
'சல்யூட்' அடித்தேன்
'ஷேக்ஹாண்ட்' கொடுத்தாள்.
"என்னடா வேண்டும்?
எப்படா வந்தாய்?
சொன்னுல் தருவேன்
சொல்வாய்'' என்ருள்.
"அன்புள்ள செல்லம்
அழகாய்த் தவழும்
சின்னக் கண்ணன்
சீக்கிரம் வேண்டும்''
என்றேன் உடனே
எங்கோ சென்ருள்
எதையோ எடுத்து
என்னிடம் தந்தாள்.
கண்டேன் அதையே
கண்ணன் இதழ்தான்.
கண்டேன் அவளை
'களுக்' எனச் சிரித்தாள்.
"வேடிக்கை காட்டும்
விளையாட உதவும்
விவேகம் வளர்க்கும்
வைத்துக்கொள்'' என்ருள்.
ஜோர் ஜோர் கண்ணன்
ஷோக்கான கண்ணன்
யார்தான் தருவார்
இதுபோல் கண்ணன்!
செல்லம் தந்தாள்
சின்னக் கையால்
சொல்லவே மாட்டேன்
சொன்னுல் கேட்பீர்!

—'பூவண்ணன்.'

*　　*　　*　　*

அந்புள்ள அசிரியரே,

ஞாந் கண்ணன் படிக்கிந்ந வழக்கமுண்டு மெக்கொநோ பொட்டிக்கு எழுதிநேந். பரிசி கிட்டியில்லா. இருந்தங்கிலும் ஒரு பண்ணிண்டே அதிஷ்டத்தை நெநச்சு ஞாந் வளர ஆநந்திச்சு. னிக்கி கண்ணன் படிக்கிந்ந ஆச. சந்தா தெரிவிக்கணம்............

வாசுதேவன், K., (V. 373), எர்ணகுளம்.

(இது என்ன பாஷை! என்ன எழுத்து! ஒன்னுமே மனசிலே ட்டில்லா!—ஆ-ர்.)

*　　*　　*　　*

## எழுதுங்கள்

**பேனு நண்பர்கள்:** R. M. சுப்பையா (S. 907), தேபிரித்தோ உயர்நிலைப் பள்ளி டல், ராமநகர், தேவகோட்டை.

**தீப்பெட்டிப் படம் சேகரிப்பவர்கள்:** T. S. மதுரைராஜன், (M. 83) 3, மாயாண்டியாபிள்ளை சந்து, மதுரை.

**தபால் தலை சேகரிப்பவர்கள்:** R. விசுவநாதன் (V. 44), 59, பெரியகடைத் ரு, திருச்சிராப்பள்ளி.

## பொய்க்கால் குதிரை

(ஒரே கோட்டில் வரைந்த படம்)

T. V. ரங்கசாமி, ஆரணி.

# கேட்டீர்களா!

## நாபல் பரிசு

நோபல் பரிசைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களே! இந்தியாவில் நோபல் பரிசு பெற்றவர்கள் கவியரசர் ரவீந்திரநாத ...ாகுர், சர். சி. வி. ராமன் ஆகியவர்கள். கவியரசருக்கு இலக்கியத் ...க்காகவும் சர் சி. வி. ராமனுக்கு விஞ்ஞானத்துக்காகவும் பரிசுகள் வழங்கப்பட்டன. இப்பொழுது நம்முடைய இந்தியப் பிரதம ...ந்திரி ஜவாஹர்லால் நேருவின் பெயர் நோபல் சமாதானப் பரிசுக்கு ...ந்த வருஷம் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அவரோடு ஐக்கிய ...டுகள் சபை பொதுக் காரியதரிசி மிஸ்டர் டிரிக்விலி எனபவருடைய ...யரும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

* * *

## ...ரிய கார்

உலகிலேயே மிகப் பெரிய கார் மைசூர் மகாராஜாவுடையது ...ர். இவருக்காகவென்றே ஆர்டர் கொடுக்கப்பட்டுத் தயாரித்தது ...ு. இந்த மோட்டார்காரின் பெயர்: 'டெய்மலர் ஸ்டிரைட் 8.'

* * *

## ...லுக்குப் பதில்

ஜப்பானியச் சிறுவர் சிறுமிகளுக்காக முன்பு இந்திரா என்ற ...ானைக்குட்டியை நேரு பரிசாக அனுப்பினரல்லவா? அதற்குப் பதி...க ஜப்பான் நகர நிர்வாகஸ்தர்கள் சில பிராணிகளை அனுப்பத் தீர் ...னித்திருக்கிறார்கள். நீர்நாய், உடும்பு, வாத்து ஆகிய பிராணி...ளில் இரண்டு இரண்டு ஜப்பானிலிருந்து வரப் போகின்றன. ...ல் இரண்டு கரடிகளை அனுப்புவதாக அவர்கள் எண்ணினார் ... ஆனால் அவர்களுக்கு கரடிகள் கிடைக்கவில்லையாம். இப் ...இந்திரா டோக்கியோ மிருகக் காட்சி சாலையில் ஜாம் ஜாம் ...தமும், தழைகளும் தின்றுகொண்டு இருக்கிறது. ஜப்பா...ர்களும் சிறுமிகளும் 'பட்டிக்காட்டான் யானை பார்ப்பது' ...ந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள்! நான் சொல்வது பொய் ... திராவைப் பிலிம் எடுத்த ரீல்கள் நேருவுக்கு ஜப்பானி...ப்போகின்றன. அதைப் பார்த்துக்கொள்ளுங்கள்!

* * *

...யதுச் சிறுவன் ஒருவன் ஒரு விபத்தில் மாட்டிக் ...வன் முகவாய் முறிந்து, நாக்கும் அறுபட்டுப் ...லண்டனில் மூன்று சர்ஜன்கள் சேர்ந்து சோதனை ...த் தயாரித்து அவனுக்கு வைத்திருக்கிறார்கள். ...் சிறுவன் புது நாக்கினல் பேச முடிகிறதாம்.

* *

## ...தை

...லகில் மாபெரும் மேதையாக விளங்கிய டாக்டர் ...க ரெட்டி (ஸி. ஆர். ரெட்டி) பிப்ரவரி 2-ஆம் தேதி ... இவருக்கு வயது 70. கடைசியாக இவர் மைசூர் சர்வ

கலாசாலைப் புரோசான்ஸலராக இருந்தார். இவர் முன்பு ஆந்
சர்வகலாசாலை உப அத்யக்ஷகராக இருந்தவர்.

* * *

## விசேஷக் கண் காட்சி

பாகிஸ்தானிலுள்ள உப்புப் பாறைகளிலிருந்து எடுக்கப்பட்
இரண்டு உப்புக் கற்களை சென்னைக் கண்காட்சிசாலையில் வைத்
கிருர்கள். சென்னையில் உள்ளவர்கள் இன்னும் 13 நாட்களுக்
அங்கே நேரில் சென்று பார்க்கலாம்.

* * *

## உல்லாசப் பிரயாணம்

சென்னை ஹிந்து தியாலஜிகல் ஹைஸ்கூல் மாணவர்கள் சு
400 பேர்கள் 60 உபாத்தியாயர்கள் தலைமையில் தஞ்சை, திரு
யாறு, கும்பகோணம் முதலிய இடங்களுக்கு உல்லாச யாத்
சென்றுவந்தார்கள். யாத்திரை வெகு ஜோராக இருந்ததாம்.

* * *

## நீங்களும் கவனிக்கவேண்டும்

''எந்த அரசியல் கட்சிகளுடனும் மாணவர்கள் சம்பந்தப்
கூடாது. படிப்புக்குக் கெடுதல் மட்டுமல்ல; நாட்டு நலனுக்கும்
கெடுதல்'' என்று உதவி வெளிநாட்டு மந்திரி டாக்டர் பி. வி. கே
பஞ்சாப் மாணவர் மகாநாட்டில் பேசினுர்.

* * *

## டெலிவிஷனில் சிவப்பு வர்ணம்

முள்ளைத் திருப்பவேண்டியதுதான். உலகத்தில் நடக்கும்
விஷயங்களை இந்த டெலிவிஷன் மூலமாகப் பார்த்துக் கேட்க
ஆனல் இது இன்னும் ரேடியோ செட்டுக்கள் மாதிரி எல்லா
களுக்கும் பரவவில்லை. இந்த டெலிவிஷனில் சிவப்பு,
வெள்ளை இந்த மூன்று வர்ணங்களும் தெரிவதில்லை. சிவப்
அடியோடு தெரியாதாம். டெலிவிஷன் காமிராக்காரர்க
வர்ணத்தை அடியோடு வெறுக்கிருர்கள். எலக்டிரானிக்
இந்த வர்ணத்தைப் பிரதிபலிப்பதே யில்லை. ஒரு சமய
சிவப்பு உடை அணிந்து நீச்சல் அடிப்பதை டெலிவிஷ
படம் பிடித்தன. படத்தில் சிவப்பு உடையே காணப்

* *

## சென்னையில் ஜனதிபதி

மார்ச் 8-ஆம் தேதி இந்திய ஜனதிபதி டாக்ட
பிரஸாத் சென்னைக்கு விஜயம் செய்கிருர். 11-ஆ
திரும்புகிருர். சென்னையில் 9-ஆம் தேதி ம
கல்லூரியில் சர்தார் வல்லபபாய் படேலின் உருவப்ப
வைக்கிருர். சர்வகலாசாலையில் திருக்குறள் ஆராய்
வைப்பார். 10-ஆம் தேதி காலை ஔவை விடுதிக்கும்
துக்கும் விஜயம் செய்வார். அன்றே மயிலாப்பூர் குப்பு
ஆராய்ச்சிக் கழகத்தில் மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ
உருவப்படத்தையும் திறந்துவைக்கப் போகிருர்.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.